விலை ரூபா: 15.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 மாசி 11 திங்கட்கிழமை (23.02.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 066



SATS-TECH ENGINEERS




NEW PACKAGES & RENEWAL
CALL:- 222 5908 / 222 8812



# வன்னி மக்களை வெளியேற்ற அமெரிக்க அரசு நடவடிக்கை!

## இணைத்தலைமை நாடுகளும் உதவி

(கொழும்பு)

வன்னியில் சிக்குண்டிருக்கும் மக்களை வெளியேற்றுவதற்கு உதவி வழங்கும் இணைத்தலைமை நாடுகளின் உதவியுடன், அமெரிக்காவின் தலைமையின் கீழ் மனிதாபிமான மீட்பு நடவடிக்கையொன்று மேற்கொள்ளப்படவிருப்பதாக கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (12ஆம் பக்கம் பார்க்க)





வன்னியில் மேற்கொள்ளப்பட்ட எறிகணைத் தாக்குதல்களால் உறவுகளை இழந்து கதறி அழும் பெண்கள். படங்கள்: புதினம்

## ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இலங்கை குறித்து விளக்கம்

### பிரித்தானியா ஆதரவு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் இலங்கை நிலைமை தொடர்பாக விளக்கமளிக்கும் மெக்சிக்கோவின் தீர்மானத்துக்கு பிரித்தானியாவும் தனது ஆதரவுக் குரலை வெளிக்காட்டியுள்ளது.

இலங்கை விவகாரம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் விளக்கமளிக்கப்பட வேண்டுமென ஐ.நாவுக்கான பிரித்தானியத் தூதுவர் ஜோன் சவெர்ஸ் கூறியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் (12ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறையில் துப்பாக்கிச் சூடு 21 கிராமவாசிகள் உயிரிழப்பு

(கொழும்பு)

கிழக்கே மொனராகலை,மற்றும் அம்பாறை மாவட்டங்களின் எல்லைக்கிராமமொன்றில் நேற்று முன்தினம் மாலை நுழைந்த ஆயுதம் தரித்த குழுவொன்றினால் மேற்கொள் ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 21 பேர் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் 20 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இங்கினியாகலை பிரதேசத்திலுள்ள ரத்மல்கஹஎல கிராமத்தில் சேனைப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த கிராமவாசிகள் மீதே இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளினாலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக தகவல் வெளியிட்டுள்ள பாதுகாப்பு அமைச்சு; குழந்தைகள், பெண்கள் உட்பட 21 பேர் கொல்லப்பட்டும் 20 பேர் (12ஆம் பக்கம் பார்க்க)

## புதுக்குடியிருப்புப் பகுதியில் படையினர்-புலிகள் மோதல்

(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்ட புதுக்குடியிருப்பு பிரதேசத்திலும் அம்பலவன் பொக்கணை பகுதியிலும் இலங்கை இராணுவத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே கடும் மோதல்கள் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவித்துள்ள பாதுகாப்பு அமைச்சகம் இதில் 36 விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டதாகவும் அவர்களின் 11 சடலங்களை கைப்பற்றியிருப்பதாகவும் கூறியிருக்கிறது.

அத்துடன் புதுக்குடியிருப்பு பிரதேசத்திலும் ஏற்கனவே (12ஆம் பக்கம் பார்க்க)

## எறிகணைகள் வீழ்ந்து வெடித்ததில் வன்னியில் நேற்றும் 50 பேர் பலி

### 130 பொதுமக்கள் படுகாயம்

(கொழும்பு)

வன்னிப் பகுதியில் நேற்று மேற்கொள் ளப்பட்ட எறிகணைத் தாக்குதல்களில் 50 பொதுமக்கள் உயிரிழந்துள்ளதுடன் 130 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

பாதுகாப்பு வலயப் பகுதி என அறிவிக்கப்பட்டுள்ள மாத்தளன்,அம்பலவன் பொக்கணை, முள்ளி வாய்க்கால், வலைஞர்மடம் ஆகிய பகுதிகள் மீதே இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.


இத்தாக்குதலில்,

சிவகுமார் அஜித் (வயது 10), அ.கமலினி (வயது 6), புலேந்திரன் (வயது 53), து.குலசிங்கம் (வயது 65) ஆகியோர் உயிரிழந்தவர்களில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

வ.குணசிங்கம் (வயது 33), க.பார்த்தீபன் (வயது 35), க.அற்புதம் (வயது 4), அ.இராஜேந்திரம் (12ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவிலிருந்து மருத்துவர்களை அனுப்பக் கோருகிறார் கருணாநிதி

(சென்னை)



இலங்கை விவகாரத்தில் தலையிட்டு, அங்கு பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ மருத்துவக்குழுக்கள் மற்றும் மருந்துகளை உடனே அனுப்பி வைக்க வேண்டும் என்று பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு எழுதியுள்ள கடிதத்தில் முதல்வர் கருணாநிதி வலியுறுத்தியுள்ளார்.

பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு முதல்வர் கருணாநிதி எழுதியுள்ள கடிதம், போர் பகுதியில் இருந்து ஆயிரக்கணக்கான அப்பாவி தமிழர்கள் வெளியேறி தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள முகாம்களில் தங்கியுள்ள தகவல் சர்வதேச ஊடகங்களில் வெளிவந்ததை (12ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா.–செஞ்சிலுவைச் சங்கம் உதவினால் மக்களை வெளியேற்ற ஆட்சேபம் இல்லை


### இரா.சம்பந்தன் இந்தியாவுக்கு அறிவிப்பு

(லண்டன்)

ஐ.சி.ஆர்.சி மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் உதவியுடன் இந்தியா உதவ முன் வருமானால் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் மோதல்களில் சிக்கியுள்ள மக்களை வெளியேற்றும் நடவடிக்கைகளுக்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஆட்சேபனை எதுவும் தெரிவிக்காது என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் பி.பி.சி தமிழோசைக்குத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

மக்கள் தங்களுடைய கிராமங்களில் இருந்து வேறு இடங்களில் நீண்ட காலத்திற்கு வாழ முடியாது.

மிகவும் குறைந்த காலத்தில் மக்கள் திரும்பி தமது கிராமங்களுக்குச் செல்ல வேண்டும். (12ஆம் பக்கம் பார்க்க)



வன்னியில் நேற்று இடம்பெற்ற எறிகணைத் தாக்குதலில் படுகாய மடைந்து வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருபவர்களைப் படங்களில் காணலாம்.

# பாடசாலை கிரிக்கெட் வீரர்களை தேசிய மட்டத்தில் இணைக்கப் பயிற்சி

## அரவிந்த டீ சில்வா அறிவிப்பு

இலங்கைக் கல்வி அமைச்சு, ஸ்ரீ லங்கா துடுப்பாட்டச் சபை மற்றும் அரவிந்த டீ சில்வா துடுப்பாட்ட நிதியம் என்பன ஒருங்கிணைந்து வட மாகாண மட்ட துடுப்பாட்டப் போட்டிகள் மூலம் சிறந்த துடுப்பாட்ட வீரர்களை தெரிவு செய்யும் செயலமர்வினையும் பயிற்சியினையும் எதிர்வரும் 13ஆம், 14ஆம், 15 ஆம் திகதிகளில் யாழ். பரியோவான் கல்லூரியில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக துடுப்பாட்டச் சபையின் முன்னாள் தலைவர் அரவிந்த டீ சில்வா தெரிவிக்கின்றார்.

யாழ். குடாநாட்டிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பதினொரு பாடசாலைகளிலிருந்து 70க்கு மேற்பட்ட துடுப்பாட்ட வீரர்களுக்கு தகுந்த துடுப்பாட்டப் பயிற்சிகளை வழங்கி அவர்களுள் சிறந்த ஏழு வீரர்களைத் தெரிவுசெய்து தேசியமட்டத்தில் இணைத்துக் கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளது.

2008ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதியன்று 15 வயதிற்கு மேற்பட்ட 2008 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 18 வயதுக்குக் குறைந்த மாணவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குவதற்காக பாடசாலை மட்டத்தில் துடுப்பாட்ட வீரர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்களை பாடசாலை அதிபர் ஊடாக பெப்ரவரி 28ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இவ் மூன்று நாள் பயிற்சியின் போது உணவு, தங்குமிட வசதி, விளையாட்டு உபகரணங்கள், உடை என்பவற்றை வழங்குவதற்கு கொக்கோகோலா நிறுவனம் முன்வந்துள்ளதாக அரவிந்த டீ சில்வா துடுப்பாட் நிதியம் அறிவிக்கின்றது.

இந்த வைபவம் முதன் முதலாக யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளதால் இதனைக் கண்டுகளிப்பதற்கான சந்தர்ப்பங்களை பொதுமக்களுக்கும் வழங்குவதற்கு இராணுவத்தினரால் ஏற்பாடுகள் செய்யப் படவுள்ளன.

யாழ். மத்திய கல்லூரி, யாழ்.பரியோவான் கல்லூரி, யாழ்.இந்துக் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி, உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி ஆகிய பாடசாலைகள் இப் பயிற்சி நெறிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளன. (ச)

# கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட பெண்ணுக்கு அபராதம்

(பருத்தித்துறை)

சட்டவிரோத கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட பெண் ஒருவருக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தால் 2 இலட்சத்து 25 ஆயிரம் அபராதமும் அபராதத்தை செலுத்தத் தவறின் 3 வருட சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.

கரவெட்டி குடவத்தையைச் சேர்ந்த பிரஸ்தாப நபரை பருத்தித்துறை மதுவரி பரிசோதகர்கள் கைது செய்து பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து கசிப்பு உற்பத்தி செய்த குற்றத்திற்கு 75 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத் தவறின் 12 மாத சிறைத்தண்டனையும் கசிப்பு வைத்திருந்த குற்றத்திற்கு 25 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத் தவறின் 6 மாத சிறைத் தண்டனையும். கசிப்பு உற்பத்தி கோடாவை வைத்திருந்த குற்றத்திற்காக 75 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத் தவறின் 10 மாத சிறைத்தண்டனையும் கசிப்பு உற்பத்திக்கான உபகரணங்களை வைத்திருந்த குற்றத்திற்காக 50ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத் தவறின் 8 மாத சிறைத்தண்டனையும் அளித்து தீர்ப்பளிக்கப்பட்டது. (ச-52)

# ஐ.நா.முன்றலில் தமிழர்கள் மாபெரும் கண்டனப் பேரணி

## 15 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பங்கேற்பு



(ஜெனிவா)

ஐரோப்பா எங்கும் இருந்து கலந்து கொண்ட தமிழர்களின் பேரணியும் கண்டன ஒன்றுகூடலும் சுவிற்சர்லாந்தில் உள்ள ஜெனிவா நகரில் கடந்த 20ஆம் திகதி நடைபெற்றது. இதில் 15 ஆயிரத்துக்கும் அதிகமானோர் கலந்து கொண்டனர்.

ஜெனிவா புகையிரத நிலையத்திற்கு அருகில் உள்ள பூங்காவில் இருந்து ஐக்கிய நாடுகள் சபை பணியகத்தை நோக்கி ஐரோப்பா வாழ் தமிழர்கள் பேரணியாக நடந்து சென்றனர். 'எமக்கு வேண்டும் தமிழீழம்' 'எங்கள் தலைவன் பிரபாகரன்' 'சிறிலங்கா அரசே போரை நிறுத்து' போன்ற முழக்கங்களை உரத்த குரலில் எழுப்பிய வாறும் தாயக உறவுகளின் அவலத்தை எடுத்துக்காட்டும் வாசகங்களை கொண்ட பதாகைகளை தமது கைகளில் தாங்கிய வாறும் மக்கள் நடந்து ஐக்கிய நாடுகள் சபையின் முன்றலை அடைந்தனர்.

ஐரோப்பிய நாடுகளில் பேசப்படும் பல மொழிகளில் தமிழ் இளையோர் உரைகளை ஆற்றியதோடு, தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் கிளைப் பேச்சாளர் அல்பேட்டினதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயானந்தமூர்த்தியினதும் சிறப்புரைகள் இடம் பெற்றன.

இளையோர் அமைப்புப் பிரதிநிதிகள் ஐக்கிய நாடுகள் சபையிடம் மனுவை கையளித்தனர். மனுவைப் பெற்றுக்கொண்ட ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகள் நீதியான போராட்டத்தை நடத்திய தமிழ் மக்களுக்கு உரிய பதில் அளிப்பதாகத் தெரிவித்தனர். (ச-5)

# கிணற்றிலிருந்து வயோதிபர் சடலமாக மீட்பு

புத்தூரில் வயோதிபர் ஒருவரின் சடலம் கிணற்றில் இருந்து மீட்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் புத்தூர் வடக்கு, புத்தூரைச் சேர்ந்த சிற்றம்பலம் மயில்வாகனம் (வயது 76) என்ற வயோதிபரே கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டவராவார்.

சடலம் நேற்று யாழ். போதனா வைத்திய சாலைக்குக் கொண்டுவரப்பட்டு பிரேத பரிசோதனையின் பின் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (ச-3)

# நாட்டில் அமைதி வேண்டி இன்று சர்வமத வழிபாடுகள்

நாட்டில் அமைதி வேண்டி சிவராத்திரி தினமான இன்று சர்வமதங்களும் வழிபாடுகளில் ஈடுபடுமாறு யாழ். ஆயர் இல்ல நீதி சமாதானத்திற்கான ஆணையம் கேட்டுள்ளது. மகாசிவராத்திரி தினத்தில் நாட்டின் அமைதிக்காக விழித்திருந்து வேண்டுதல் செய்யும் இந்து மக்களுடன் தோழமையை வெளிப்படுத்தும் முகமாக சர்வமதங்களும் தமது ஆலயங்களில் வழிபாடுகள் நடத்த அழைக்கப்படுகிறார்கள். இதற்காக கத்தோலிக்க ஆலயங்களில் திருவிழிப்பு வழிபாடுகள் இடம்பெறும் என்றும் யாழ். ஆயர் இல்ல நீதி சமாதானத்திற்கான ஆணையம் தெரிவித்துள்ளது. (ச)

# தீக்குளித்த தி.மு.க. தொண்டர் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

தமிழகத்தின் ஆளும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞர் அணி நேற்று முன் தினம் நடத்திய மனித சங்கிலி போராட்டத்தின் போது தீக்குளித்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அக்கட்சியின் தொண்டர் சிகிச்சை பலனளிக்காத நிலையில் உயிரிழந்துள்ளனர்.

கிண்டி ஹல்டா பகுதியில் மனித சங்கிலி போராட்டம் நடைபெற்ற போது அக்கட்சியின் தொண்டரான சிவப்பிரகாசம் நேற்று முன் தினம் சனிக்கிழமை மாலை 4 மணியளவில் தலையில் மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்துக் கொண்டார்.

உடனே அவரது உடலில் பற்றி எரிந்த தீயை அக்கட்சியின் தொண்டர்கள் அணைத்து மருத்துவ மனைக்கு எடுத்துச் சென்றனர்.

அவரது உடலில் 80வீதம் தீக்காயங்கள் ஏற்பட்டு இருந்ததால் அவர் ஆபத்தான நிலையில் இருந்தார். மருத்துவர்கள் அவருக்கு தீவிர சிகிச்சை அளித்த போதிலும் சிகிச்சை பலனளிக்காத நிலையில் நேற்று முன்தினம் இரவு 11.00மணியளவில் உயிரிழந் தார்.

சிவப்பிரகாசம் உடலம் . பிரேத பரிசோதனைக்குப் பின் நேற்றுக் காலை 9.00மணியளவில் அவரது மகன் சிவகுமாரிடம் ஒப்படைக்கப்பட்டது. மருத்துவமனையில் இருந்து நோயாளர் காவு ஊர்தியின் மூலம் தரமணியில் உள்ள அவரது வீட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. அங்கு கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள், ஏராளமானோர் மலர் வணக்கம் செலுத்தினர். (ச-5)

# எதிர்த் தாக்குதலால் பாடசாலை மாணவி பலி

விடுதலைப் புலிகளின் விமானங்கள் மீது பாதுகாப்புத் தரப்பினர் நடத்திய தாக்குதல்களில் 14 வயது பாடசாலை மாணவி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பாடசாலை மாணவியான ஹான்சி உதேஷிக்கா விடுதலைப்புலிகளின் விமானங்கள் மீது தாக்குதல்கள் நடத்திய சமயம் இராஜகிரியவிலுள்ள அவரது இல்லத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்ததாகவும் இதன்போது விமானத்தாக்குதல்களின் சன்னங்கள் அவர் மீது பட்டதாகவும் பொலிஸ் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரஞ்சித் குணசேகர தெரிவித்தார்.

இதேவேளை கடந்த வெள்ளிக்கிழமை நடத்தப்பட்ட விமானத் தாக்குதல்களைத் தொடர்ந்து 54 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக தேசிய வைத்திய சாலையின் பணிப்பாளர் வைத்தியர் ஹெக்டர் வீரசிங்க கூறினார். (எ-1)

# இன்று ஒரு தகவல்

## ஞானத் தெளிவு

ஒரு தத்துவச் சிந்தனையாளர் இருந்தார். அவர் பெயர் சுவாங்ட்ஸு .அவருடைய மனைவி திடீரென காலமாகிவிட்டார்.

ஆறுதல் சொல்வதற்காக சிலர் அவரைத் தேடி வந்தார்கள். வந்தவர்களுக்கோ ஆச்சரியம்!

ஏனெனில், அவர் வருத்தப்படாமல் தாளம் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தார்.

தாளத்திற்குத் தகுந்தாற் போல் பாட்டும் பாடிக் கொண்டிருந்தார்.

என்ன மனிதர் இவர்? கொஞ்சம் கூட கவலையில்லாமல் இப்படி இருக்கிறாரே என்று நினைத்தார்கள்.

ஒருவர் துணிந்து அவரிடமே கேட்டார்.

அதற்கு அவர் என்ன சொன்னார் தெரியுமா?

" இதோ பாருங்க... என் மனைவி பிறப்பதற்கு முன்னால் அவளுக்கு உயிரும் இல்லை. உடலும் இல்லை.அ தற்குப் பின்னர்தான் உயிர் வந்தது. உடல் வந்தது. அந்த உருவம் வந்தது.

இப்பொழுது அந்த உருவமும் உயிரும் போய் விட்டது. அவ்வளவுதான். பருவங்கள் மாறி மாறி வருவதுபோல் பிறப்பும் இறப்பும் மாறி மாறி வருகிறது. இது இயற்கை. இதற்காக ஏன் அழ வேண்டும்?" என்றாராம்.

ஞானத் தெளிவு அடைந்தவர்களுக்கு எல்லாமே சுகம்தான்.

"உறங்குவது போலும் சாக்காடு ; உறங்கி விழிப்பது போலும் பிறப்பு" என்கிறார் திருவள்ளுவர்.

இந்த உலக வாழ்க்கையின் இயல்பை- யதார்த்தத்தை நாம் தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டும். அப்படிப் புரிந்துகொண்டால் நாம் கவலையில்லாமல் வாழமுடியும்.

வயதான தாத்தா, பாட்டி அறுபது வருடமாக ஒன்றாக வாழ்ந்து ஒன்றாகவே இறந்துபோனார்கள். அவர்களிருவரும் சொர்க்கத்திற்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

அங்கு எல்லா வசதிகளும் இருந்தன. ஒரு பெரிய பங்களாவை இவர்களுக்கு ஒதுக்கிக் கொடுத்தார்கள்.

அந்த பங்களாவுக்குப் பின்னால் ஒரு பெரிய புல்வெளி. "இதில் விளையாட ஏதாவது கட்டணம் உண்டா?" என்று கேட்டார் தாத்தா.

" அதெல்லாம் ஒன்றும் கிடையாது. நீங்கள் பாட்டுக்கு விளையாடலாம்" என்றார் அங்கிருந்தவர்.

பக்கத்தில் ஹோட்டல் மாதிரி ஒரு பெரிய கட்டடத்தில் சாப்பாட்டு மேஜை, அதன்மேல் பலவிதமான பலகாரங்கள் இருந்தன.

"சாப்பாட்டுக்கு எவ்வளவு?"என்றார் தாத்தா.

" இங்கு எல்லாம் இலவசம். எது வேண்டுமானாலும் எவ்வளவு வேண்டுமானாலும் சாப்பிடலாம்" என்றார் அவர்.

"நீங்கள் இப்படிச் சொல்கிறீர்கள். ஆனால் எனக்குப் பாட்டி கையால் எப்பொழுதும் பத்தியச் சாப்பாடு தான்" என்றார் தாத்தா.

" இங்கே உங்களுக்கு எந்தக் கவலையில்லாமல் சுவீட் சாப்பிடலாம். உறைப்பு சாப்பிடலாம். உங்களுக்கு எந்த நோயும் வராது" என்றார் சொர்கத்திலிருந்தவர்.

இதைக் கேட்டவுடன் அந்தத் தாத்தா பக்கத்திலிருந்த பாட்டியைப் பார்த்துக் கத்தினாராம்.

" அடிப்பாவி! எல்லாத்தையும் கெடுத்திட்டியே... எனக்கு பத்தியச் சாப்பாடு போடாமல் கண்டதையும் சாப்பிட விட்டிருந்தால் பத்து வருஷத்துக்கு முன்னாலேயே நான் இங்கு வந்து சேர்ந்திருப்பேனே!" என்றாராம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# கனேடிய சமாதான தூதுக்குழு விரைவில் இலங்கை வருகை

(கொழும்பு)

கனடாவில் இருந்து சமாதான தூதுக்குழு ஒன்று எதிர்வரும் மே அல்லது ஜூன் மாதம் அளவில் இலங்கை வரவுள்ளதாக கனடாவில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கனடாவின் ஆளுங் கட்சி, எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்களை உள்ளடக்கியுள்ள மேற்படி சமாதானத் தூதுக்குழு இலங்கை அரசு தரப்புடன் அபிவிருத்தி பற்றிப் பேசும் அதேவேளையில் அரசியல் தீர்வு முன்வைக்கப்பட வேண்டியதன் அவசியம் பற்றியும் வலியுறுத்த உள்ளதாகவும் அச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஏனெனில் அரசியல் தீர்வு இல்லாது முன்னெடுக்கப்படும் அபிவிருத்திகளால் முழுமையான பலன்களை அடைந்து விடமுடியாது. மீண்டும் பிரச்சினைகள் தலைதூக்குமாயின் முன்னெடுக்கப்பட்ட அனைத்து அபிவிருத்திப் பணிகளும் பயனற்றுப் போய் விடும் என்பதாலேயே அபிவிருத்தியுடன் அரசியல் தீர்வின் தேவை குறித்தும் இலங்கை வரவுள்ள கனடா அமைதித் தூதுக்குழு இலங்கைத் தரப்புடன் பேச உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கனடாவில் இருந்து அண்மையில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட ஒரு தூதுக்குழு தமது இலங்கை அனுபவங்கள் தொடர்பாகவும் இலங்கை அரசின் பிரதி நிதிகளுடனான கலந்துரையாடல்கள், எதிர்பார்ப்புகள் தொடர்பான அறிக்கையினை சமர்ப்பிக்கவுள்ளதாகவும் இதனையடுத்தே கனடா அரசாங்கம் சமாதானத் தூதுக்குழுவை அனுப்பவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட கனேடிய தூதுக் குழுவில் ஐந்து அல்லது ஆறுபேர் அளவில் இடம்பெற்றதாக அறியமுடிகின்றது. இந்தத் தூதுக்குழுவில் கனடாவில் இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்து வாழ்ந்து வரும் தமிழர்களும் இடம் பெற்றிருக்கின்றனர்.

மேற்படி தூதுக்குழுவின். இலங்கை விஜயத்தின் போது வடக்கு-கிழக்கில் குறிப்பாக வடக்கில் முன்னெடுக்கப்பட வேண்டிய அபிவிருத்திப் பணிகள்,நிதி முதலீடுகள், அபிவிருத்தித் திட்டங்கள் போன்ற பல விடயங்கள் பற்றியும் பேசப் படவுள்ளது. (6)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தினால் முகாமைத்துவத் துறையில் வியாபார முது தத்துவ மாணி (MBA), பட்டமேற் கல்வி டிப்ளோமா, தொலைக்கல்வி ஆகிய கற்கைநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் யாழ். பிராந்திய நிலையத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று எதிர்வரும் 28 ஆம்திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு யாழ்.பிராந்திய இணைப்பாளர் கேட்டுள்ளார்.(6-7)

## இராசி பலன்

*23.02.2009*
*(மாசி 11, திங்கட்கிழமை)*
*சதுர்த்தசி முழுவதும்*
*திருவோணம் மாலை 6.31 மணிவரை*
*இராகுகாலம் 8.00 - 9.30 மணிவரை*
*சுபநேரம் 12.30-2.00 மணிவரை*
*அமிர்தசித்தம்,*
*மகாசிவராத்திரி விரதம்*

| | |
|---|---|
| மேடம் | அதிகபிரயாசை, சுபநிகழ்வு, காரிய நன்மை, அதிகாரம். |
| இடபம் | புதிய திருப்பம், உணர்ச்சி வசப்படல், கட்டுப்பாடு, பிதா சிந்தை. |
| மிதுனம் | வாகனபயம்,உடல்நலக்குறைவு, காரிய தடங்கல், கெளரவக் குறைவு. |
| கடகம் | களஸ்திர நன்மை, கலந்துரையாடல், இஷ்டசித்தி, பொருள் சேர்க்கை. |
| சிங்கம் | தொழில் விருத்தி, உடல் நலம், முயற்சி பலிதம், சிந்தனை மிகுதி. |
| கன்னி | சிறுவியாதி, காரிய இடையூறு, உறவினர் மனஸ்தாபம், தன விரயம். |
| துலாம் | மனச்சோர்வு, சுபசெலவு, தெய்வசிந்தை, முயற்சி தாமதம். |
| விருச்சிகம் | பிரயாண நன்மை;உறவினர் வருகை,இஷ்டசித்தி, பெருமையடைதல். |
| தனுசு | சத்துரு ஜெயம், வீண் விவாதம், முயற்சி தாமதமாகும், பண விரயம். |
| மகரம் | பெரியோர் தொடர்பு,கற்பனை மிகுதி, தெய்வதரிசனம், முயற்சி தாமதம். |
| கும்பம் | இடமாற்றம், சயனசுகக் குறைவு, சுபசெலவு ,வேலைச் சுமை. |
| மீனம் | தடைப்பட்ட காரியம் கைகூடும் , தனஇலாபம்,கலந்துரையாடல், கீர்த்தி. |

வளவன்

# கொழும்பு விமானத் தாக்குதலையடுத்து தமிழகத்தில் பாதுகாப்பு தீவிரம்


(சென்னை)

கொழும்பில் விடுதலைப் புலிகள் நடத்திய விமானத் தாக்குதலைத் தொடர்ந்து தென்னிந்தியாவிலும் தாக்குதல் நடத்தக் கூடும் என்ற சந்தேகத்தின் பேரில், தமிழகம் மற்றும் கேரளாவில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

விடுதலைப்புலிகளின் இந்த தற்கொலைப் படைத் தாக்குதல் இந்திய அரசுக்கு கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தென்னிந்தியாவின் முக்கிய பகுதிகளில் விடுதலைப் புலிகள், விமானம் மூலம் தற்கொலைப் படைத் தாக்குதல் நடத்தக் கூடும் என்ற சந்தேகம் எழுந்துள்ளதை அடுத்து, இந்திய விமானப்படை ,4 ஏவுகணைகளை தென் இந்தியப் பகுதிக்குள் முன்னெச்சரிக்கை பாதுகாப்பு நடவடிக்கைக்காக அனுப்பியுள்ளது.

இவற்றில் 3 ஏவுகணைகள் தமிழகத்திலும், 1 ஏவுகணை கேரளாவிலும் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக செய்திகள் தெவிக்கின்றன. (6)



ஏழாலை மகாவித்தியாலய கால்கோள் விழாவில் வித்தியாலய அதிபர் செ.ஞானச்சந்திரன் மங்கல விளக்கேற்றுவதையும், அருகில் தரம் 1, தரம் 2 மாணவர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம்.

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் |
|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 110 |
| உருளைக்கிழங்கு | 100-110 | 100 |
| பச்சைமிளகாய் | 70 | 80 |
| தக்காளி | 60 | 50 |
| அவரை | 40 | 35 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 |
| கோவா | 40 | 40 |
| கரட் | 50 | 60 |
| பூசணி | 25 | 30 |
| புடோல் | 25 | 25 |
| வாழைக்காய் | 70 | 70 |
| சின்ன வெங்காயம் | 25 | 30 |
| பெரிய வெங்காயம் | 50 | 60 |
| பாகற்காய் | 50 | 60 |
| வெண்டிக்காய் | 30 | 40 |
| கரணைக் கிழங்கு | 30 | 30 |
| பயிற்றங்காய் | 50 | 60 |
| லீக்ஸ் | 120 | 130 |
| போஞ்சி | 20 | 25 |
| கீரை - 1 பிடி | 10 | 10 |
| தேசிக்காய் | 100 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 |

## சிவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

சித்தன்கேணி சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிவசிதம்பரேஸ்வரர் ஆலயத்தில் இன்று நள்ளிரவு இலிங்கோற்பவருக்கு விசேட அபிஷேகம், சாம பூசைகள் என்பன இடம்பெற்று அதிகாலை கேணியில் தீர்த்தமாடி சுவாமி வீதியுலா வரும் நிகழ்வு இடம்பெறும்.

இதேவேளை, பண்ணாகம் விசுவத்தனை முருகன் ஆலயத்திலும் சிவராத்திரி தின நான்கு சாம பூசைகள் இடம்பெறவுள்ளன. (6)

❖❖❖

(பருத்தித்துறை)

கோப்பாய் ஸ்ரீ சாந்தலிங்கேஸ்வரர் ஆலய பாற்குட அபிஷேகமும் சிவராத்திரி விழாவும் இன்று நண்பகல் 12 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஸ்ரீ சாயிமாதா செல்வி ராகேஸ்வரி சேனாதிராஜா ''ஆன்மீகமும் மனித வாழ்வும்'' என்னும் விடயம் பற்றி சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். (6-52)

❖❖❖

சாவகச்சேரி அருள்மிகு சந்திரசேகர வாரிவன நாத சிவன் தேவஸ்தான மகா சிவராத்திரி விழா இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

இன்று காலை திருவாசக முற்றோதல் இடம்பெற்று மாலை நான்கு சாமப் பூசைகளும் அதனைத் தொடர்ந்து சமயச் சொற்பொழிவும் திருமுறை பாராயணமும் வாரிவனம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வும் புராணபடலமும் இடம்பெறவுள்ளது.

மேலும் லிங்கேற்பவ மூர்த்திக்கு அடியார்கள் தாமே நீர் எடுத்து அபிஷேகம் செய்ய ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (6)

❖❖❖

(யாழ்ப்பாணம்)

அராலி தெற்கு அகாயக்குளம் விநாயகர் ஆலய சிவராத்திரி விழா இன்று மாலை 6 மணிக்கு ஆலய மண்டபத்தில் யாழ். தொழில்நுட்பக் கல்லூரி முன்னாள் அதிபரும் ஆலய அறங்காவலருமான சு.செந்தில்நாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் அராலி தெற்கு கோகுலம், கோமாதா அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் மற்றும் திருமுறைப் பாராயணம், திருமுறை ஓதல் பஜனை நிகழ்வுகள் என்பன இடம் பெறவுள்ளது. (6)

## அமைதிப் பிரார்த்தனை

(யாழ்பபாணம்)

இந்து அமைப்புகளின் ஏற்பாட்டில் நல்லை ஆதீன முதல்வரின் தலைமையில் நேற்று நடைபெற்ற ஆன்மீகப் பிரார்த்தனையில் நாட்டில் வலுவான சமாதானம் ஏற்பட வேண்டும் எனவும் அல்லலுறும் மக்களின் துன்பங்களை நீக்கி அமைதியான சூழல் ஏற்படவேண்டும் எனவும் பிரார்த்திக்கப்பட்டது.

மேலும் இன்றைய சிவராத்திரி நன்னாளில் சகல ஆலயங்களிலும் நாட்டில் சாந்தியும் சமாதானமும் அமைய வேண் டும் என்று சகல மக்களும் பிரார்த்தனையில் ஈடுபட வேண்டும் என இந்து அமைப்புக்கள் சார்பில் நல்லை ஆதீன முதல்வர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (6)

# சைவப்புலவர் பட்டமளிப்பு விழா

(சித்தன்கேணி)

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் 48 ஆவது ஆண்டு நிறைவு பொதுக் கூட்டமும் சைவப்புலவர் பட்டமளிப்பு விழாவும் எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி காலை 9.30 மணிக்கு வண்ணை நாவலர் மகா வித்தியாலய மண்டபத்தில் யாழ். பல்கலைக்கழக சைவ சித்தாந்த முதுகலைமாணி வருகை விரிவுரையாளரும் அகில இலங்கை சைவப்புலவர் சங்கத் தலைவருமான மு.திருஞானசம்பந்தபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் யாழ்.பல்கலைக்கழக இந்துநாகரிகத் துறை தலைவரும், சைவ சித்தாந்த முதுகலைமாணி இணைப்பாளருமான கலாநிதி மா.வேதநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

யாழ்.பல்கலைக்கழக சைவ சித்தாந்த வருகை விரிவுரையாளர் முது அறிஞர் ஆ.சபாரத்தினம் கௌரவிக்கப்படவுள்ளார்.

ஆசியுரையை நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமி வழங்குவார்.

அத்துடன் கவியரங்கமும், கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளது. (6-17)

## இலங்கை வங்கி சாவ.கிளையின் நடமாடும் கருமபீடம்

(சாவகச்சேரி)

இலங்கை வங்கியின் சாவகச்சேரிக் கிளையினர் கைதடி வடக்கு மீள் எழுச்சிக் கிராமத்தில் நடமாடும் கருமபீடத்தினை எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி நடத்தவுள்ளனர்.

சிறுவர் சேமிப்பு கணக்கு ஆரம்பித்தல், சிறுகைத்தொழில் புரிவோருக்கான ஆரம்ப கட்ட நடவடிக்கை மேற்கொள்ளல் போன்ற செயற்பாடுகள் நடமாடும் கருமபீடத்தில் இடம்பெறுமனெ கிளை முகாமையாளர் ச. சந்திரகுமாரன் அறிவித்துள்ளார். (6-29)

## மத்தியஸ்தர் பரீட்சைக்கான முன்னோடி வகுப்புகள்


(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை வலைப்பந்தாட்ட சம்மேளனத்தால் வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கு நடத்தப்படவுள்ள பரீட்சைக்கான முன்னோடி வகுப்புகள் இன்று காலை 10 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

எனவே பரீட்சை எடுக்க இருக்கும் சகல வலைப்பந்து மத்தியஸ்தர்களையும் சமுகமளிக்கமாறு யாழ்.வலைப்பந்தாட்ட மத்திய சங்க தலைவர் திருமதி A.F.J.ரூபசிங்கம் கேட்டுள்ளார். (6)

## புத்தகங்களை பெற்றுக்கொள்ளவும்

பருத்தித்துறை கோட்ட பாடசாலை மட்டக் கணிப்பீட்டுக்கும் மதிப்பீட்டுக்குமான புத்தகங்கள் அச்சிடப்பட்டுள்ளதால் மேற்படி பாடசாலைகள் இம்மாதம் 26ஆம் திகதிக்கு முன்னர் கோட்டக் கல்வி அலுவலகத்தில் பணத்தை செலுத்தி அவற்றை பெற்றுக்கொள்ளலாம் என கோட்டக்கல்வி அதிகாரி பா. இரகுநாதன் அறிவித்துள்ளார். (6-19)



அளவெட்டி வடக்கு அ.த.க.பாடசாலை கால்கோள் விழா மற்றும் பொங்கல் விழாவில் அதிபர் அ.இரங்கநாதன், பிரதம விருந்தினரான அளவெட்டி பிரதேச வைத்தியசாலை மாவட்ட வைத்திய அதிகாரி க.இராதேயனுக்கு மாலை அணிவித்து வரவேற்பதையும், நிகழ்வில் கலந்துகொண்ட ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களையும் படங்களில் காணலாம்.

## சட்டவிரோத கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவருக்கு ஒரு வருட கடூழிய சிறை

(பருத்தித்துறை)

சட்டவிரோத கசிப்பு உற்பத்தி உபகரணங்களை வைத்திருந்த ஒருவருக்கு 75 ஆயிரம் ரூபா அபராதமும் 1 வருட கடூழிய சிறைத் தண்டனையும் அபராதத்தை செலுத்த தவறின் மேலும் 1 வருட சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.

கடந்த வருடம் ஜனவரி மாதம் பருத்தித்துறை பொலிஸார் மேற்கொண்ட திடீர் சோதனையின் போது அல்வாயைச் சேர்ந்த எம். கௌதமன் என்பவர் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி உபகரணங்களுடன் அகப்பட்டுக் கொண்டார்.

சந்தேக நபர் பருத்தித்துறை மாவட்ட நீதிபதி கே.அரியநாயகம் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டபோது தான் குற்றவாளி எனத் தெரிவித்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து வழக்கு விசாரணை நடைபெற்று வந்தது.

இவ் எதிரி முன்னரும் சட்டவிரேத கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட குற்றத்திற்காக ஒரு இலட்சத்து 25 ஆயிரம் அபராதமும் ஒரு வருட கடூழிய சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டதென்றும் எதிரியின் சகோதரனின் மனைவி நளினிக்கும் இதே குற்றத்திற்காக 2 இலட்சத்து 25 ஆயிரம் அபராதமும் கட்டத் தவறின் 3 வருட கடூழிய சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.

இக் குற்றச் செயல்களினால் சமூகத்திற்கு பெரும் பிரச்சினைகள் ஏற்படுவதாகவும் இது சமூகத்திற்கு பெரும் சவாலாக இருப்பதாகவும் மன்றில் தெரிவிக்கப்பட்டது. (6-52)



## யாழ்.செய்திகள்

## முன்பள்ளிக்கு மாணவர்களை இணைத்துக் கொள்ளல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி தென்னிந்திய திருச்சபையில் இடைநிறுத்தப்பட்டிருந்த முன்பள்ளி புதுப்பொலிவுடன் நாளை செவ்வாய்க்கிழமை ஆரம்பமாக உள்ளது.

பிள்ளைகளைச் சேர்க்கவிரும்புபவர்கள் சாவகச்சேரி புகையிரத நிலைய வீதியில் உள்ள குருமுதல்வர் இல்லத்தில் விண்ணப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (6-29)


## விழிப்புக்குழு அமைப்பு

நவாலி வடக்கு J/134 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பகுதியிலுள்ள பிரதான வீதிகளில் மக்கள் விழிப்புக்குழு அமைக்கப்பட்டு வருகின்றது.

இதற்கான ஏற்பாடுகளை நவாலி வடக்கு கிராம அலுவலர் அ.தனபாலரத்தினம் மேற்கொண்டுள்ளார்.

இதேவேளை இன்று மாலை 4 மணிக்கு புலவர் வீதிக்கான விழிப்புக்குழு அமைக்கப்படவுள்ளதால் இது தொடர்பான கூட்டத்திற்கு புலவர் வீதி, தலுவில் வீதி, தேற்றாமரத்தடி வீதி, நவாலி கல் ஒழுங்கை, ஊட்டுக்குழி வீதி ஆகிய ஐந்து வீதிகளைச் சேர்ந்த மக்கள் வருகை தர வேண்டும் எனவும் 18 முதல் 60 வயது வரையான ஆண்கள் அடையாள அட்டை உடன் சமுகமளிக்குமாறும் கிராம அலுவலர் கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும் நவாலி வடக்கிலும் எட்டு பிரதான வீதிகளுக்கான மக்கள் விழிப்புக்குழ அமைக்கப்படவுள்ளதாகவும் சங்கரத்தை களையோடை கண்ணகி அம்மன் வீதியைச் சோந்த மக்களுக்கான விழிப்புக்குழு, கிராம அலுவலர் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளதாகவும் கிராம அலுவலர் மேலும் தெரிவித்துள்ளார். (6)



கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலய மாணவர்களுக்கு யாழ். மாநகரசபை முன்னாள் முதல்வர் அமரர் எஸ்.எஸ்.நவரத்தினம் நினைவாக, இலவச கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டன.

திருமதி அ.சாந்தபிரபா, யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி உப பீடாதிபதி பா.தனபாலன் ஆகியோர் மாணவிகளுக்கு கல்வி உபகரணங்களைக் கையளிப்பதைப் படங்களில் காணலாம்.

# இலங்கையில் தமிழர் 78

### ஹெள மக்களும் தமிழ் மக்களும் பொ.ஆ.300-900

இளம் பாரிந்திரனுக்கு அடுத்ததாக ஆண்டவன் திரீத (தமிழ்: திருதரன், சமஸ்கிருதம்:ஸ்ரீதர) என்பவன் ஆவான். இவன் சில மாதங்கள் ஆண்டபின், இவனுடைய மகன் தாடிய (ஸ்ரீ தாடியன்) என்பவன் ஆட்சி நடத்தினான். இவன் இயற்பெயர் மஹாநாகன் என்பது கல்வெட்டு ஒன்றின் மூலம் அறியக் கூடியதாய் உள்ளது. தந்தை திருதரன் என்ற வைணவப் பெயரைப் பெற்றிருந்தபடியால் பௌத்தனாக இருந்தானோ என்பதைக் கண்டு கொள்ளமுடியவில்லை.

ஆனால் மகன் மஹாநாதன் பௌத்த நிறுவனம் ஒன்றை ஆதரித்தான் என்பது கல்வெட்டுச் சான்று கொண்டு கூறக்கூடியதாய் உள்ளது. இதனால் மஹாநாகன் இளம் பாரிந்திரனைப் போன்று பௌத்தனாக இருந்திருக்கலாம்.

இவனுக்குப் பின் பீடிய என்ற தமிழ் மன்னன் ஆண்டதாக அறிகின்றோம். இவன் ஏழு மாதங்கள் ஆண்டபின் தாதுஸேன என்ற சிங்கள இளவரசன் ஆட்சியைக் கைப் பற்றி அனுராதபுரத்தில் மீண்டும் சிங்கள வம்சத்தின் ஆட்சியை நிறுவினான்.

இவ்வாறாக ஆறு தமிழ் மன்னர்கள் ஐந்தாம் நூற்றாண்டில் அனுராதபுரத்தில் 25 ஆண்டுகளுக்கு மேலாக ஆண்டனர். தமிழ்நாட்டில் பௌத்தம் எழுச்சிபெற்றிருந்த அந்த நூற்றாண்டில் இவர்கள் பௌத்தர்களாக இருந்தமை வியப்புக்குரியதன்று. அனுராதபுரத்து மக்களுடைய ஆதரவைப் பெறுவதற்காக இவர்கள் பௌத்தத்தை ஆதரித்தனர் என்று கூற அவசியமில்லை. இத்தகைய கருத்துத் தவறாகும். அதுமட்டுமன்றி, அனுராதபுரத்திலிருந்த சிங்கள உயர் குழாத்தினருடைய ஆதரவு இம் மன்னர்களுக்கு இருந்தது என்பதையும் பாளி நூல்கள் மூலம் அறியலாம்.

### தமிழ் மெய்காப்பர்

தாதுஸேன மன்னனுடைய ஆட்சியின் (455-473) பின் அனுராதபுரத்தது அரசியல் சிறிது காலம் உறுதி பெற்றிருந்தது. தாதுஸேனனின் ஆட்சியின்போது நீர்ப்பாசன வசதிகள் பல அமைக்கப்பட்டன ; விவசாயம் வளர்ச்சியடைந்தது. ஆனாலும், அனுராதபுரத்தின் பிரசித்தி பெற்ற மன்னர்களுள் ஒருவனாகப் பெயர் பெறும் தாதுஸேன பரிதாபத்துக்குரிய வகையில் அவன் மகன் காஸ்யப என்பவனால் கொல்லப்பட்டான். அதன்பின் காஸ்யப மன்னனாக ஆட்சியேற்க, அவன் சகோதரன் முகலன் தென்னிந்தியாவுக்குத் தப்பியோடிச் சென்று, பதினெட்டு ஆண்டுகள் அங்கு தங்கியிருந்து, இறுதியில் அங்கிருந்து ஒரு படையுடன் வந்து காஸ்யப மன்னனை வென்று ஆட்சியைக் கைப்பற்றினான்.

முகலன் தென்னிந்தியாவுக்கு ஓடிச் சென்று,வாய்ப்பு ஏற்படும்போது படைதிரட்டி வந்து ஆட்சியைக் கைப்பற்ற எடுத்த முயற்சி எந்தவிதத்திலும் ஒரு புது முயற்சி ஆகாது. முதலாம் நூற்றாண்டில் இருந்தே அனுராதபுரத்தில் ஆட்சியை இழந்தவர்கள் அல்லது ஆட்சியைக் கைப்பற்ற நோக்கங் கொண்டவர்கள் தென்னிந்தியாவுக்குச்சென்று படை திரட்டி வருவது வழக்கமாக இருந்தது. இப்படைகள் பொதுவாக இலங்கைக்கு அருகில் இருந்த தமிழ் அரசுகளில் இருந்தே கொண்டு வரப்பட்டன.


இவ்வழக்கத்தின் முக்கியத்துவம் என்னவெனில், அடிக்கடி .இவ்வாறு படைகள் கொண்டுவரப்பட்ட போது தமிழரும் பிற தென்னிந்தியச் சமூகத்தினரும் கூடுதலாக இலங்கையில் குடியேறுவதற்கான வாய்ப்புகள் ஏற்பட்டன. முகலன் ஆட்சிக்காலத்தில் இப்படிப் பல தலைவர்கள் வருவது புறக்கணிக்க முடியாத ஒரு பிரச்சினையாக இருந்தது எனத் தோன்றுகிறது. ஏனெனில், இப்படி வருவோரைத் தடுப்பதற்கு முகலன் கரையோரக் காவல்படைகளைப் பயன்படுத்தினான் என அறிகின்றோம்.ஆனால், முகலன் காலத்துக்குப் பின் இத்தகைய நிகழ்ச்சிகள் மேலும் கூடினவேயொழியக் குறைய வில்லை.

இக் காலப் பகுதியில் அரண்மனைச் சதிகளும் அரசியல் சூழ்ச்சிகளும் நம்பிக்கையின்மையும் மலிந்து காணப்பட்டபோது அனுராதபுரத்து மன்னர்கள் தமிழ் மெய்காப்பர்களில் தங்கியிருக்கும் நிலை உருவாகியது. தங்கள் சொந்தப் பாதுகாப்புக்கும் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கும் இந்த மெய்காப்பர் பெரிதும் தேவைப்பட்டனர்.

தென்னிந்தியா- இலங்கைப் பிராந்தியத்தில் இருந்த அரசு களில் மட்டுமன்றி, உலகின் வேறு பாகங் களிலும் தங்கள் சொந்தப் பாதுகாப்புத் தேவைகளைக் கவனிக்கப் பிற நாட்டவரைக் காவலராக நியமிப்பது மன்னர்களுடைய பொது வழக்காக இருந்தது.தமிழ்நாட்டில் முதலாம் இரண்டாம் நூற்றாண்டுகளில் மன்னர்கள் யவன( கிரேக்க-

பேராசிரியர்
**கா. இந்திரபாலா**

உரோம) மெய் காப்பர்களை வேலைக்கு அமர்த்தினர். அனுரா தபுரத்திலும் யவனப் படையினர் முதலாம் இரண்டாம் நூற்றாண்டுகளில் பணியாற்றி யிருக்க முடியும். இக்காலப் பகுதியில் தமிழ் மெய்காப்பர்கள் சிங்கள மன்னர்களைப் பாதுகாத்தது போன்று, தமிழ் நாட்டில் சிங்கள மெய்காப்பர் பணியாற்றினர். (தொடரும்)



புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ஜி.வி.இராதாகிருஷ்ணன் உரையாற்றுவதையும், விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும், மாணவர்களின் அணிநடை நிகழ்வையும் படங்களில் காணலாம்.

# சுதேச நாட்டியம் பத்திரிகையும் [1902-1915]

# கல்லடி வேலனும் 17

இதனைச் சற்று விளக்கிக் கூறுவதாயின் யாழ்ப்பாணச் சமூகத்தில் இருந்த அதிகார அந்தஸ்துப் படிமுறையைத் தொடர்ந்து பேணி வலுப்படுத்துதல் என்ற நிலைப்பாடே அவரின் கருததாக இருந்தது. அதிகதாராண்மைவாத கல்விப்பயிற்சி நெறியைப் பெற்றுக் கொள்ளாத க.வே. அக்காலத்தில் ஆங்கிலக் கல்வி பெற்றவர்கள் அறியக் கூடியதாயிருந்த தாரண்மைவாத சிந்தனை அடிப்படைகளான சுதந்திரம், தனி நபர்களாகச் சட்டத்தின் முன் சமத்துவம் பெறுதல், அனைவரையும் சமத்துவமுடையவர்களாகக் கருதுதல் ஆகிய விடயங்களை ஏற்றுக்கொண்டவராக இருக்கவில்லை. ஆனால் அடிப்படையான இரக்கம்,அன்பு, நட்பு ,பாசம்,விசுவாசம், கடவுள் மீதான பக்தி,மூடநம்பிக்கையாகச் சொல்லப்படும் கனவு, சகுனம், சோதிடத்தில் நம்பிக்கை, சாமுத்திரிகாலட்சணங்களை ஏற்றல், ஆகியவற்றை ஏற்று முழுதாக நம்புகின்ற போக்கினைக் காணமுடியும். அக்கால சமூகத்தைப் பற்றிய அவரது நோக்கு நிலையை பின்வரும் பகுதி நன்றாக விளக்குகின்றது.

'யாழ்ப்பாணத்திலேயுள்ள ஒவ்வொருவரும் தன்னை யோக்கியவன் என்றும் , உயர்ந்த சாதிக்காரனென்றும் சாமர்த்தியமாய்ப் பேசி வாயடிக்கிறதை நாம் காண்கின்றோம். உள்ளபடி நாம் அவர்களின் யோக்கியதையும், சாதியையும் எடுத்து வெளியிடக்கூடுமாயின், அவரை மதித்து, அவர் சுகம் பெறுவார்க்கு சத்துருவாய் விடுவதுமன்றி, 'மான நட்டம்' என்ற ஓர் வழக்கிலும் எதிரியாகி எமது பத்திரிகையும் கெட்ட பத்திரிகையென்று பிறர் நிந்திக்கச் செய்கிறதாய் முடியும்.'பசுத்தோல் போர்த்துப் புலிப்பாய்ச்சல் பாய்கிற' இவர்களை நாம் முகமனுக்கே..' (சு.நா.15.09.1902).

முதலாவது பத்தரிகையிலேயே இவ்வாறு வெளிப்படையாகத் தமது கருத்தினை முன்வைக்கின்றார். முன்னர் சுட்டிக்காட்டியது போன்ற புதிய சமூக உருவாக்கத்தின் பண்புகளைப் புலப்படுத்தும் தன்மை கொண்டவையாகவும் இதனை நாம் விளங்கிக் கொள்ள முடியும்.

தொடர்ந்து அவர் குறிப்பிடும் பகுதி மேலும் இக்கருத்தைவலியுறுத்தும் தன்மை கொண்டதாக உள்ளது. இப்புதிய வகுப்பினரில் பெரும்பாலானவர்கள், முன்னேற்றம் பெறுவதற்கு உதவிய பாதையைத் தேடிக்காட்டும் கல்லடியானின் விமர்சனம் எமக்குப் பல விடயங்களைப் புரிய வைக்கின்றனது. பிற்காலத்தில் சிங்களத் தலைவர்கள் கிறிஸ்தவத்தைக் கைவிட்டு பௌத்த மதத்திற்கு மாறியது (அவர்களை டொனமூர் பௌத்தர்கள் என்பர்) போன்று நம்மவர்களும் ஒரு போது கிறிஸ்தவத்தில் இருந்து, சைவத்திற்கு மாற வேண்டியுள்ளவர்களாக இருந்துள்ளனர் அல்லவா?

'பாதிரிமார், கத்தோலிக்ககுருமார்... கற்று, அவர்கள் சோற்றையுண்டு, அவர்களிடத்திலே நாகரிகம் பயின்று, அவர்கள் மார்க்கத்திலே சில நாளேனும் நின்று, மோசே, மேவின்,உவின்சிலோ, பேசின், மெக்கின்றையர், கிங்ஸ்பரி, காரல், ஐஸ்பரி, நெவின்ஸ், சினேல் பற்றேஷன் என்பது போலும் பெயர்களை தரிக்கப்பெற்று, பின் உத்தியோகங்களில் அமர்ந்து, பின் பழைய பெயர்களை மாற்றிச் சந்திரசேகரம், விசுவநாதபிள்ளை, சிதம்பரப்பிள்ளை,தாமோதரம்பிள்ளை என்பது போலும் பெயர்களைத் தரித்துக்கொண்டு நாங்களே பத்தியுள்ள சைவசமயிகளெண்டிருப்பவரையும்: இவர்கள் மக்கள் மருமக்கள், சகோதரர், மாமன்மார், மைத்துனர், பேரன், பீட்டன்மாரையும், ஒக்கலாயுள்ளவரையும் விடதற்காலத்திலொருவர் இவ்வுரிமையிற் சிறிதுந் தொடாத சைவசமயி, செல்வன், பிரபு என்றிருக்கின்றாரா? அவ்வாறொருவர் இருப்பராயின் அவரையன்றோ பரம்பரை யோக்கியன், சாதிமான், சைவசமயப்பிரபு, சீர்திருத்தமுள்ளவர் என்பது தகுதியாகும். (சு.நா.15.09.1902)

இதுமட்டுமன்றிச் சமூகத்தில் முதன்மை நிலை பெற எத்தனித்தவர்களின் நன்றிக் குறைவான செய்கையென மேற்படி விடயத்தைச் சுட்டிக்காட்டுவதையும் அவதானிக்கலாம்.

சுதேச நரட்டியம் இரண்டாவதாக வெளியிடப்பட்ட பத்திரிகை பிரதியில் '' வேளாளர் சூத்திரரல்லர்'' கட்டுரையொன்றின் முதற் பகுதி காணப்படுகிறது. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் சாதி பற்றிய பிரச்சினை மிக முக்கியத்துவம் பெற்றதாக இருந்தது. இங்கு பத்திரிகைக்காரர் புதிய கருத்தொன்றை நிறுவமுற்படுவதைக் காணலாம். நால் வர்ணக் கோட்பாட்டின்படி, வேளாளர் சூத்திரர் என்றும் சில வேளைகளில் அதனை விசேடித்து சற்சூத்திரர் என்றும் பேசப்பட்டு வந்தது. இப்பொழுது நிகண்டை ஆதாரமாகக் காட்டி வேளாளர் தொழில் அடிப்படையில் வேளாண்மை செய்தமையால் வந்த பெயரென்றும் , அவர்கள் தொழில்,கடமை ஆகியவற்றின் அடிப்படையில் வைசியர் என்றே கொள்ளப்படக் கூடியவர் என்றம் இப் பத்திரிகை கூறுகிறது.

'பிரம, சஷத்திரிய, வைசிய, சூத்திரரென்னும் நால்வகை வருணக் கிரமப்படி இந்துக்களை வகுக்கத் தொடங்கியதில் வேளாளரைச் சூத்திரரிற் சேர்த்திருப்பது தகுதிக்குறைவும் நியாய விரோதமுமாக இருக்கிறது.'

**திருமதி.சோ.கிருஷ்ணகுமார்**
சிரேஷ்ட விரிவுரையாளர், வரலாற்றுத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்.

' இந் நாற்பாலாருள் வேளாளர் எனப்படுவோர் எப்பாலரைச் சேர்ந்தவரென நாம் தீர்மானிக்க வேண்டியது அவசியமென்றே சில தாஷ்டாந்த திருஷ்டாந்தங்களைக் கொண்டு ஈண்டதைச் சாதித்துத் தீர்மானிக்க முயன்றனம்.' (சு.நா.29புரட்டாதி 1902)

இக் கருத்துக்களைப்பார்க்கும் போது, சாதிவரையறை பற்றிய பலவகையான கருத்து நிலைகள் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தில் முன்வைக்கப்பட்டிருப்பதையும், அதுவே அக்காலத்தில் பிரதான கருப்பொருளாக இருந்தது என்பதை ஊகிக்க முடிகிறது. (தொடரும்)

# போர் நிறுத்தம் அமுல்படுத்த வேண்டுமென வலியுறுத்தி ஐரோப்பிய வெளியுறவுத்துறை அமைச்சர்கள் இன்று தீர்மானம்

(கொழும்பு)

வன்னிப் பிரதேசத்தில் இடம்பெற்று வரும் மோதல்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டுமென்பதனை வலியுறுத்தும் வகையில் ஐரோப்பிய நாடுகளது வெளியுறவுத் துறை ·அமைச்சர்கள் இன்று தீர்மானமொன்றை நிறைவேற்றத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான மோதல்களினால் அதிகளவான பொதுமக்கள் இழப்புக்களை எதிர்நோக்கியுள்ளதாக அமைச்சர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

யுத்த வலயத்திலிருந்து பொதுமக்களை பாதுகாக்கும் நோக்கில் இந்த யுத்த நிறுத்தம் அமுல்படுத்தப்பட வேண்டுமென ஐரோப்பிய ஒன்றிய நாடுகளது வெளிவிவகார அமைச்சர்கள் கூட்டாக இந்த கோரிக்கையை முன் வைக்க தீர்மானித்துள்ளனர்.

மேலும் பயங்கரவாத நடவடிக்கைகளை கைவிட்டு ஆயுதங்களை களையுமாறு தமிழீழ விடுதலைப் புலிகளிடம் ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் கோரிக்கை விடுக்க உள்ளதாகத் தெரிய வருகிறது.

நீண்டகாலமாக தொடரும் இலங்கையின் தேசியப் பிரச்சினைக்கு ஒரு போதும் யுத்தத்தின் மூலம் தீர்வு காண முடியாதென ஐரோப்பிய ஒன்றியம் சுட்டிக்காட்டியுள்ளது.

மனித உரிமை மீறல் சம்பவங்கள் நிறுத்தப்படவேண்டும் எனவும் ஐரோப்பிய ஒன்றிய வெளி விவகார அமைச்சர்கள் கோரிக்கை விடுக்கத் திட்டமிட்டுள்ளனர். (6)

# பொதுமக்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்

## முன்னாள் ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

இராணுவ நடவடிக்கைகளின் காரணமாக பொதுமக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

பொதுமக்களை பாதிப்புக்கு உட்படுத்தும் வகையிலான இராணுவ தாக்குதல் நிறுத்தப்பட வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இராணுவப் படையினருக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான மோதகளில் பல பொதுமக்கள் கொல்லப்படுவதாகவும்,இடம்பெயர நேரிட்டுள்ளதாகவும் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாக குறிப்பிட்டுள்ள அவர், பொதுமக்களை பாதிப்புக்கு உட்படுத்தி அடையும் இராணுவ வெற்றிகள் விரும்பத்தக்கக் கூடியதல்ல எனவும் தெரிவித்துள்ளார். (6)

# திருமலையில் சிகிச்சை பெறும் வன்னி நோயாளர்களை பொலனறுவைக்கு மாற்றுவது பொருத்தமானதல்ல

## ஆயர் கலாநிதி கிங்ஸ்லி சுவாம்பிள்ளை

(கொழும்பு)

முல்லைத்தீவில் யுத்த சூழ்நிலை காரணமாக காயமடைந்த நிலையில் திருகோணமலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தவர்களை பொலனறுவை வைத்திசயசாலைக்கு மாற்றுவது என்பது தற்போதைய சூழ்நிலையில் பொருத்தமானதாக இல்லை என மட்டக்களப்பு -திருகோணமலை ஆயர் கலாநிதி கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவிலிருந்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினால் கடல் வழியாக அழைத்து வரப்பட்டு திருகோணமலை வைத்தியசாலையில் சிகிச்சைக்கென அனுமதிக்கப்பட்டிருந்த நோயாளர்கள் மற்றும் காயமடைந்தவர்களில் 178 பேர் வைத்திய சாலையில் எற்பட்டுள்ள இட நெருக்கடி காரணமாக பொலனறுவை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்கள். இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள மட்டக்களப்பு- திருகோணமலை ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை,


திருகோணமலை வைத்தியசாலையில் இட நெருக்கடி ஏற்பட்டிருப்பதை தவிர்க்கும் வகையில் இவர்கள் மாற்றப்பட்டிருந்தாலும் மட்டக்களப்பு போன்ற தமிழ் பிரதேசங்களிலுள்ள வைத்தியசாலைகளுக்கு இவர்களை மாற்றவது தற்போதைய சூழ்நிலைக்கு பொருத்தமானது என்றும் குறிப்பிட்டார்.

பொலனறுவை வைத்தியசாலையில் வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் ஊழியர்கள் உட்பட சகலரும் பெரும்பான்மை இனத்தவரின் மொழியான சிங்களம் பேசுபவர்கள். சிகிச்சைக்காக மாற்றப்பட்டுள்ளவர்களைப் பொறுத்தவரை தமிழ் மொழி பேசுபவர்கள் இதனால் மொழி ரீதியான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை உள்ளது.

சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டவர்களை உறவினர்கள் சென்ற பார்வையிடுவது என்றால் பாதுகாப்பு கெடுபிடிகள், போக்குவரத்து கெடுபிடிகள், அங்கு தங்கியிருப்பவர்கள் தொடர்பான பிரச்சினைகளுக்கு அவர்கள் முகம் கொடுக்க வேண்டியுள்ளது. அது மட்டமல்ல அங்கு சேவையாற்றுபவர்கள் சேவை மனப்பான்மையுடன் இவர்களுக்கு சேவையாற்றினாலும் மக்களையும் விடுதலைப் புலிகளாக கருதுபவர்களும் உண்டு.

ஏற்கனவே உறவினர்களுடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்ட நிலையில் திருகோணமலை வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்ட இவர்கள் அங்கிருந்து அறிமுகமில்லாத இடமொன்றிற்கு மாற்றப்பட்டிருப்பதானது அவர்களிடையே தனிமைப்படுத்தப்பட்ட உணர்வுகளை ஏற்படுத்தும்.

இந் நிலையில் தனக்கு கிடைத்துள்ள தகவல்களின் படி அங்கு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டவர்களிடையே ஒரு வித அச்சமும் பீதியும் இருப்பதை அறியக் கூடியதாகவுள்ளது என்றும் கூறினார். (6)



தொண்டைமானாறு செல்வச்சந்நதியான் ஆச்சிரம 'ஞானச்சுடர்' கட்டுரையாளர் கௌரவிப்பு விழாவில் ஆன்மீக எழுத்தாளர் இராசையா ஸ்ரீதரன் நல்லை ஆதீன குரு முதல்வரால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்படுவதையும் அருகில் அருள் இராமலிங்கம் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# அனைத்துவகை கைத்தொலைபேசிகளுக்கும் பொருந்து வகையில் இனி ஒரே சார்ஜர்

(பார்சிலோனா)

அனைத்து வகை கைத்தொலை பேசிகளுக்கும் பொருந்தும் வகையில் ஒரேமாதிரியான சார்ஜர் உற்பத்தி செய்ய கைத்தொலைபேசி நிறுவனங்கள் உறுதி அளித்துள்ளன. கைத்தொலை பேசிகளை மாற்றும்போது தனியாக அதற்கு சார்ஜர்கள் வாங்கவேண்டியுள்ளது.

ஒவ்வொரு நிறுவனத்தின், ஒவ்வாரு மொடல் கைத்தெலைபேசிக்கும்,அதற்கென மட்டும் பொருந்தும் வகையில் சார்ஜர்களை இணைத்து வழங்கப்பட்டன. அதறகு முன்னர் பயன்படுத்திய சார்ஜர், பயன்படுத்த தேவையின்றி வீணாகிறது.

இந்நிலையைமாற்றி, அனைத்துகைத் தொலைபேசிகளுக்கும் பொருந்தும் வகையல் ஒரே மாதிரியான சார்ஜ்கள் கொண்டு வர ஜி.எஸ்.எம்.ஏ.கைத்தொலைபேசி துறையினர் முடிவுசெய்துள்ளனர்.

எதிர்வரும் 2012 ஆம்ஆண்டுமுதல் விற்பனைக்குக்கொண்டுவரப்படும் அனைத்து கைத்தொலைபேசிகளுக்கும், இனி சார்ஜர்கள் ஒரே மாதிரியாக இருக்கும். எந்த நிறுவனத்தின்,எந்தமொடலுக்கும் இந்த சார்ஜர் பொருந்தும்வகையில்இருக்கும்.

இந்த சார்ஜர்கள்,அதற்கு பின்னர் விற்பனைக்கு வரும்அனைத்து வகை மொடல் கைத்தொலைபேசிகளுக்கும்பொருந்துவதாக இருக்கும்.தற்போது பயன்படுத்தமுடியாத பழைய சார்ஜாகளால் உலகம் முழுவதும்,



ஆண்டுக்கு 51ஆயிரம்டன் கழிவுகள் ஏற்படுகின்றன. இதனால்,சுற்றுச்சூழல் மாசு அதிகரிக்கிறது. இதையும் மனதில் கொண்டு தான், இனி ஒரே மாதிரி சார்ஜர்கள்கொண்டு வர முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் ஏடி அண்டு டி,கே.டி.எப். -எல்.ஜி, -மொபைல்கோம் ஆஸ்டிரியா, மோட்டரோலா,நோக்கியா,ஆரஞ்சு,குவால் காம், சாம்சங்,சோனிஎரிக்சன்,வோடபோன் உள்ளிட்ட நிறுவனங்கள் பங்கேற்றன. புதிதாக வெளிவரஇருக்கும் சார்ஜர்கள்,மின் சிக்கனத்துக்கும் வழி வகுப்பதாகஇருக்கும். தற்போது பயன்படுத்தப்படும் சார்ஜர்களில் இருந்து 50 சதவீதம் மின் சிக்கனம் கொண்டவையாக இவை இருக்கும். (6)

# பயங்கரவாதிகளுக்கு மரணதண்டனை வழங்க பங்களாதேஷ் அமைச்சரவை ஒப்புதல்

(பங்களாதேஷ்)

பயங்கரவாதிகளுக்கு அதிகட்பசமாக மரண தண்டனை அளிக்க வகை செய்யும் சட்டத் திருத்தத்துக்கு பங்களாதேஷ் அமைச்சரவை கடந்த வியாழக்கிழமை ஒப்புதல் அளித்தது.

பிரதமர் ஷேக் ஹசீனா தலைமையிலான அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்கு மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனை அல்லது அதிகபட்சமாக 20 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை வழங்க வகை செய்யும் சட்டத்திருத்தம் முந்தைய ஆட்சியில் மேற்கொள்ளப்பட்டது.

ஆனால் சட்டத் திருத்தத்துக்கு ஒப்புதல் அளிக்கமால் இருந்ததால் நிலுவையில் இருந்து வந்தது.

இந்நிலையில் தீவிரவாத எதிர்ப்புச் சட்டம் உட்படமேலும் நான்கு அவசரச் சட்டங்களுக்கு அமைச்சரவையில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

பங்களாதேஷில் அண்மைக்காலங்களில் பயங்கரவாத சம்பவங்கள் அதிகரித்ததைத் தொடர்ந்து அண்மையில் அமைச்சரவையின் அவசரக் கூட்டம் நடந்தது. அப்போது பயங்கரவாதத்தில் ஈடுபடுவோருக்கு கடும் தண்டனை வழங்குவது குறித்து ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது. (6)

# ஹமாஸ் தீவிரவாதிகள் ஒபாமாவுக்கு கடிதம்?

பாலஸ்தீனத்தின் ஹமாஸ் தீவிரவாதிகள் அமெரிக்க அதிபர் ஒபாமாவுக்கு கடிதம் எழுதியுள்ளதாக தெரியவந்துள்ளது.

ஆனால் அந்த கடிதம் ஒபாமாவுக்குதான் அனுப்பப்பட்டதா அல்லது வேறு யாருக்கும் அனுப்பப்பட்டதா அதை ஹமாஸ் இயத்தினர் தான் அனுப்பினார்களா அல்லது வேறுயாரும் அனுப்பினார்களா அதில் என்ன குறிப் பிடப்பட்டுள்ளது என்பது குறித்து அமெரிக்க தரப்பில் அதிகாரப்பூர்வத் தகவல் ஏதும் இல்லை.

எனினும் அந்த கடிதத்தை யார் யாருக்கு அனுப்பினார்கள் என்பதை தாங்கள் விரைவில் உறுதி செய்ய உள்ளதாக அந்நாட்டின் உள்துறை அலுவலர் ஒருவர் தெரிவித்தார்.

காஸாவில் உள்ள ஐ.நா. அதிகாரி ஒருவருக்கு இந்த கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. ஒபாமா முகவரி எழுதப்பட்டிருந்த அந்த கடிதத்ததை ஐ.நா. அதிகாரி அமெரிக்காவின் ஜனநாயகக் கட்சி செனட்டர் ஜான் கெரியை அழைத்து கொடுத்துள்ளார். அவர் அந்த கடிதத்தை ஜெருசலேமில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் ஒப்படைதுள்ளார்.

இஸ்ரோலுடன் பேச்சுவார்த்தையை தொடங்க அமெரிக்கா உதவ வேண்டும் என ஹமாஸ் இயக்கத்தினர் கோரிக்கை விடுத்திருந்தனர்.

ஆனால் இதை அமெரிக்கா ஏற்க மறுத்து விட்டது. ஆயுதங்களை கீழே போடாத வரை பேச்சுவார்த்தைக்கு உதவ இயலாது என்றும் அமெரிக்கா தெரிவித்திருந்தது.

இந் நிலையில் ஒபாமாவுக்கு உண்மையிலேயே ஹமாஸ் இயக்கத்தினர் கடிதம் எழுதியிருந்தால் அதில் அவர்கள் இஸ்ரோலுடனான பேச்சுவார்த்தைக்கு அமெரிக்க உதவும் படிதான் கோரியிருப்பார்கள் என்று அமெரிக்க அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (6)

# “சிவராத்திரியின் தத்துவம் பகவான் ஸ்ரீ சத்ய சாயி” மூலம் கலியுலகிற்கு எடுத்துக் காட்டப்படுகின்றது

சிவராத்திரியின் முக்கிய எதிர்பார்ப்பு லிங்கோற்பவர் தரிசனம். இறைவனது அருவத் திருமேனி சிவலிங்கம். சிவலிங்கத் தத்துவம், பிரபஞ்ச தோற்றம் உயிர் மற்றும் உடற் தோற்றங்களை உள்நின்று காண்பிப் பதே. ஆயிரத்து எட்டு அண்டங்கள், நூற்று எட்டு புவனங்கள், பதினான்கு லோ கங்கள் அவற்றிற்கு மேலாக எண் ணாயிரம் கோடி தேவர்கள், முப்பத்து மூன்று கோடி தேவ அதிபதிகள், எண்பத்து நான்கு இலட்ச யோனி பேதங்களில் தோற்றமுறும் உயிர் வர்க்கங்கள் யாவையும் கடந்து வான் கருணை மூர்த்தியாக விளங் கும் ஏகநாயகன் சிவன். சிவ வழி பாடு உலகு மற்றும் உயிர் தோற் றங்களுடன் சங்கமமாயது;

இன்றைய கலியுகத்தில் - மனிதனை அழிக்காமல் அவனது பாவம்-வினையை அழித்து இம்மை யிலும் மறுமையிலும் அவர் வேண் டுவன ஈய்ந்து வழிப்படுத்த தோன றிய அருள் அவ அவதாரமே பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபா. நாம் வணங் கும், உலகு வணங்கும் அனைத்து சமயங் களும், அனைத்து தெய்வங்களும் சுவாமி யின் திருவுருவில் அடங்கியுள்ளது.

மிக நீண்ட காலமாக சுவாமியின் கன் நான் கொண்ட அறியாமையில் உண்ணின்று என்னையும் இவ்வுலகத்தையும் ஆட்கொண்ட சிவராத்திரி நிகழ்வொன்றை சிவனடியார் உணரும் வண்ணம் இங்கு உண்மை தரப் படுகின்றது.

1989 ஆம் ஆண்டு சிவராத்திரி இரவு அன்று 12க்கும் மேற்பட்ட ஆலயங்களில் இசை நிகழ்வுகளை முடித்துக் கொண்டு மானிப்பாய் செல்வதற்கு அதிகாலை 4 மணியளவில் நாச் சிமார் கோயில் வழியாக எமது கார் வந்து கொண்டிருந்தது. கோவிலைத் தாண்டி அரச டியில் ஒருவர் காரின் குறுக்கே வழிமறித்தார். சாயிபாஷா விற்பன்னர் கோபாலகிருஷ்ணன் (கண்ணன் மாஸ்டர்) தான் அவர். நவரத்தின மாஸ்டரை -திருநீற்று பதிகம் பாட அம்மா அழைத்து வரும்படி கூறியுள்ளார். அங்கு

## இன்று மகாசிவராத்திரி தினமாகும்



வந்து 10 நிமிடம் பாடிவிட்டு போங்கள் என் றார்.மிகுந்த களைப்புடன் நாம் இருந்தோம். எமது பக்க வாத்தியங்களும் உடன் வந்தனர்.

அந்த அதிகாலையில் கண்ணன் மாஸ்டர் வீட்டில் மிகப் பெரிய மக்கள் வெள்ளம். பகவான் ஸ்ரீ சத்யசாயி பஜனை.

உள்ளே வந்தபின் கண்ணனைக் காண வில்லை. கண்ணனம்மா மூலம் பகவான் அருள் மாட்சியில் இரு கைகளாலும் எம்மை அபயங் காட்டி, திருநீற்று பதிகத்தை இங்குள் ளவர்க்கு இசையோடு சொல்லிக் கொடுக்கும் படி சுவாமி அருளாணை பிறப்பித்தார். முன் வரிசையில் அமர்ந்து சொல்லிக் கொடுத் தேன். பாடல் ஒவ்வொன்றாக “சத்தியமாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு” என்று பாடிக் கொண்டிருந்த வேளை கண்ணைப் பறிக்கும் மின்னல் ஒளிகள். எங்கும் தெய்வீக நறு மணம். மிகப் பெரிய அளவில் அம்மா வீடு; விரல் நுனிகளால் மற்றும் திருவாயூடு உடலின் சகல பாகங்களூடும் அனல்பிழம் பாக விபூதி. பல தட்டுக்களில் அடியார்கள் அள் ளினர். என்னே அதிசயம்! பத்ம தளத்துடன் கூடிய பொன்மயமான சிவலிங்கங்கள் ஒன் றன் பின் ஒன்றாக கண்ணனம்மா திரு வாயால் வந்தமை அங்கு வந்த பகவான் அடியார்களை உரையுணர்விளந்து கண்ணீர் மல்க ,வைத்தது. பகவான் அம்மா மூலம் தோன்றி அங்கு வந்த அனைவர்க்கும் காட்சி கொடுத்தார். திருவருள் பிரசாதமான திருநீற்றை சிலர்க்கு இட்ட காட்சியும் என் உடல் மீது திருநீற்றை மழையாகப் பொழிந்த சிவசனுபூதியும் எனது வாழ்வில் மிகப் பெரிய மாற்றத்தைத் தந்தது.

2008 ஆம் ஆண்டு சிவராத்திரிக்கு நாச்சிமார் கோயிலடி அம்மா இல்லத் திலிருந்து அழைப்பு; கண்ணன் மாஸ்டர் தமிழ்நாட்டில். நான் எப்படியும் கட்டா யம் போக விரும்பினேன். புவியியற் றுறை பேராசிரியரான இரா.சிவச்சந் திரனை அழைத்துச் செல்லும் படி என் மனம் கூறியது. அவ்வாறே நிகழ்ந்தது.

**கலாநிதி நா.வி.மு.நவரெத்தினம்**

அன்றைய தினம் என்ன நடந்தது என்பதை சிவனடியார்கள் அவர் மூலம் அறிய வேண் டும் என விழைந்து, இவ்வாண்டும் சிவசங் கல்பம் உடையவர் பகவான் மூலம் இலட்சோப இலட்சமாய் திரண்டு திருமுறை இசையில் தோய்ந்து பேரருள் பெறவேண்டும் என எல்லாம் வல்ல சுவாமியின் பொன்னார் திருப் பாதங்களைப் போற்றி செய்கிறேன்.

ஜெய் சாயிராம்

# இன்று மகாசிவராத்திரி விரதம்

சிவராத்திரி விரதம் மிகவும் எளிமையா னது. அதிகாலையில் நீராடி, பட்டினி விரதம் மேற்கொள்ள வேண்டும். வாய்புக் கிடைப் பவர்கள் மௌன விரதம் இருக்கலாம்.

இரவில் “சிவசிவ”, “நமசிவாய” ஆகிய மந்திரங்களை ஓதியபடியே, சிவாலயங்க ளில் தங்கியிருந்து நான்கு சாம கால அபிஷே கத்தையும் தரிசிக்க வேண்டும். அபிஷேகத் திற்குரிய பொருட்களை வாங்கிக் கொடுக்க வேண்டும்.

பின்னர் வீடு திரும்பி நீராடி, மீண்டும் சிவாலயம் சென்று, இறைவனை வணங்கி, பிரகார வலம் வரவேண்டும். இதன் பின் தகுதி யானவர்களுக்கு அன்னதானம், கல்வி உதவி கொடுக்க வேண்டும். இதன் பின்னரே சாப்பிட வேண்டும். முடியாதவர்கள், பால்பழம் சாப் பிடலாம். (6)

# சிவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

கட்டப்பிராய் முத்துமாரி அம்மன் தேவஸ் தான மகா சிவராத்திரி விழா இன்று தேவஸ் தான மண்டபத்தில் பரிபாலன சபைத் தலை வர் தி.ரவீந்திரநாதன் தலைமையில் நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆசியுரையை தேவஸ் தானக்குருக்கள் வ. நகுலேஸ்வரக் குருக்கள் நிகழ்த்துவார்.

முதலாம் சாமப்பூசை மாலை 7 மணிக்கும் இரண்டாம் சாமப்பூசை 9.30 மணிக்கும் மூன்றாம் சாமப்பூசை 12 மணிக் கும் நான்காம் சாமப்பூசை 4 மணிக்கும் நடைபெறவுள்ளது.

மேலும் இந்நிகழ்வில் தேவாரம், புஸ்பாஞ்சாலி, பேச்சு, தனிநடனம், கரகாட்டம், துப்பட்டா நடனம், சங்கீத ரத்தினம் கலைவாரிதி திருமதி ஸ்ரீலங்கராணி இராமச் சந்திரனின் சங்கீதக் கச்சேரி, மயில் நடனம், வேப்பிலை நடனம், பக்தி இசை மாலை, கலச நடனம், குழுநடனம் என்பவற்றுடன் சத்திய வான் சாவித்திரி இசை நாடகமும் நடை பெறவுள்ளது. (6)

❖❖❖

(யாழ்ப்பாணம்)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் தீவகப் பிரதேசத்திற்கான சிவராத்திரி விழா காரைநகர் வியாவில் ஐயனார் ஆலயத்தில் இன்று நடைபெறவுள் ளது.

இந்நிகழ்வில் ஆசியுரையை காரைநகர் வியாவில் ஐயனார் ஆலயப் பிரதமகுருவும் தலைமையுரையை இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அபிவிருத்தி உதவியாளர் எஸ். உதயபாலனும், வாழ்த்து ரையை காரைநகர் உதவி அரசாங்க அதிபர் ஆர்.ஜெயசீலனும், சிறப்புரைகளை காரை நகர் தியாகராஜா மகாவித்தியாலய அதிபர் ஆ.குமரேசமூர்த்தி , காரைநகர் வியாவில் ஐயனார் ஆலயத் தலைவர் க.சோமசேகரம் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர்.

தொடர்ந்து கலைநிகழ்வுகள் இடம்பெற வுள்ளது. (6)

# ஏழு ஓடுபாதைகளை இழந்த பின்னரும் புலிகளின் விமானம் எப்படிக் கிளம்பியது ?

## அதிர்ச்சி தெரிவிக்கிறார் ஹரிஹரன்

(கொழும்பு)

கட்டுநாயக்க விமானப்படைத்தளத்தையும், கொழும்பில் விமானப்படையின் தலைமைய கத்தையும் தாக்குவதற்கு மீண்டும் ஒருமுறை தமிழீழ விடுதலைப்புலிகள் மேற்கொண்ட திறமை மிக்க முயற்சி அதிர்ச்சியைத் தந்துள் ளது என கேணல் ஆர்.ஹரிஹரன் தெரிவித் துள்ளார்.

புலிகளின் இரண்டு இலகு ரக விமானங் களின் மூலம் துணிகரம் மிக்க முயற்சி மேற் கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட் டுள்ளார். கேணல் ஹரிஹரன் தெற்காசியா தொடர்பான இராணுவப் புலனாய்வுப் பிரிவின் நிபுணத்துவம் மிக்க ஒருவராவார். தற்போது ஓய்வுபெற்றுள்ள அவர் 1987 முதல் 1990 வரை யா்ன காலப் பகுதியல் இலங்கையில் இந்திய அமைதி காக்கும் படையின் புலனாய்வுத் துறை அதிகாரியாகப் பணியாற்றியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

கடந்த 20 ஆம் திகதி இரவு 9.45 மணிய ளவில் கட்டுநாயக்க விமானப் படைத்தளத் தையும், கொழும்பிலுள்ள விமானப்படைத் தலைமையகத்தையும் தாக்குவதற்கு தமிழீழ விடுதலைப்புலிகளின் இலகு ரக விமானங் கள் இரண்டு மீண்டும் வந்துள்ளன. ஆனால், முன்பு ஆறுமுறை விமானத் தாக்குதல் நடத்தி விட்டு புலிகளின் விமானங்கள் பாதுகாப்பாகத் திரும்பிச் சென்றுவிட்டன. இம்முறை இந்த இரண்டு விமானங்கள் வந்த இடத்திற்குத் திரும் பிச் செல்லமுடியாமல் போய்விட்டன. இரண்டு விமானங்களையும் பாதுகாப்புத் தரப்பு சுட்டு வீழ்த்தியுள்ளது.

தாக்குதல் நடத்தப் புறப்படுவதற்கு முன்னர் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகர னுடன் தற்கொலை விமானிகள் புகைப்படம் ஒன்று எடுத்துக்கொண்டுள்ளனர். இருவரையும் தனது கைகளால் அணைத்தபடி நடுவில் நிற்கும் பிரபாகரன் புன்னகையை வெளிப் படுத்தவில்லை. ஆனால், தற்கொலைத் தாக் குதல் நடத்தப் போகிறவர்கள் சிரித்தபடியே காணப்படுகிறார்கள்.

புலிகளின் மீதான உக்கிரமோதல் ஒன்றை இராணுவம் நடத்திக் கொண்டிருக்கின்ற ஒரு வேளையில் புலிகளின் இந்த விமானத் தாக் குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதுவே கடைசிக் கட்டமாகக் கருதப்படுகிறது. உண்மை யில் பாதுகாப்பு இணையத்தளம் கூறுவது போல 100 சதுர கிலோமீற்றர் பரப்பளவுக்குள் நெருக்கப்பட்டிருக்கிறார்கள் புலிகள். புலிகளின் தாக்குதல் முயற்சி தோற்றுப் போனதாகத் தோன் றினாலும் பயனுள்ள சில அம்சங்களை சுட்டிக் காட்டுவதாகவும் அமைந்துள்ளது.

◆ ஏழு விமான ஓடுபாதைகளை இழந்த பின்னரும் திட்டமிட்டு விமானத் தாக்குதல் ஒன்றை நடத்தியதன் மூலம் புலிகள் தமது பலத்தை இன்னும் இழக்கவில்லை என்பது புலனாகிறது. எனவே சரணடையக் கோருவ தும், போராட்டத்தை நிறுத்தக் கோருவதும், ஆயுதங்களைக் கீழே போடுமாறு கேட்பதும் எதுவித பயனையும் தரப்போவதில்லை. யுத்தப் பிராந்தியத்தில் சிக்கியுள்ள மக்கள் மீட்சி பெறாத நிலையில் யுத்தம் தொடரும் என்பது தான் இதன் அர்த்தமாகும். இது ஒவ்வொரு வருக்கும் பயங்கரச் செய்தியாகும்.

◆ முக்கியமாக விடை தெரியக் கூடிய கேள்வி என்னவெனில் இந்த இரு விமானங்களும் எங்கிருந்து வெளியில் கிளம்பின என்பது தான். பாதுகாப்பாக இவைகளை எடுத்துச் சென்று தாக்குதல் ஒன்று நடத்தக் கூடிய அளவில் நம்பிக்கை கொண்டுள்ளார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது.

◆ கடைசியாக, வன்னிப் பகுதியின் ஏ-9 பெருந்தெருவின் கிழக்குப் பகுதி முற்றிலும் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. ஏ-35 பரந்தன்-முல்லைத்தீவு வீதி,ஏ-32 மாங்குளம்-முல்லைத்தீவு வீதி ஆகியவற்றிற்கு இடையில் விமானம் காட்டிலிருந்து எந்த ஒரு இரகசிய ஓடுபாதை மூலமாகவேனும் புறப்பட்டிருந் தால், அது தளத்திலேயே படையினரால் கண்டு பிடிக்கப்பட்டிருக்கும். இதுகுறித்து எச்சரிக்கை அவர்களுக்கு கிடைக்கவில்லையாயின் வன் னிக்கு அப்பால் இரகசிய ஓடுபாதை உண்டு என்று ஊகிக்கலாம். மேலும், இந்த யுத்தம் அவ்வ ளவு இலகுவில் முடியப் போவதில்லை. அநேக மாக கருணாவின் கணிப்பின் படி ஒரு வருட மோ அல்லது அதற்கும் மேலோ இழுத்துக் கொண்டே போகும் என்றார். (6)

# இறைவரி திணைக்கள கணினிமயப்படுத்தப்பட்ட தகவல்களுக்கு எதுவித பாதிப்பும் ஏற்படவில்லை

## நிதி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய

(கொழும்பு)

புலிகளின் விமானம் வெடித்துச் சிதறிய மையினால் கோட்டையிலுள்ள தேசிய இறைவரி கட்டடத்திற்கு பாரிய சேதம் ஏற்பட் டுள்ளபோதிலும், கணனி மயப்படுத்தப்பட்ட தகவல்களுக்கு எதுவித பாதிப்பும் ஏற்பட வில்லை என அரச வருமான மற்றும் நிதி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித் துள்ளார்.தேசிய இறைவரித் திணைக்களக் கட்டடத் தின் சேவைகள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை அளவில் வழமை நிலைக்குக்- கொண்டு வர முடியும் எனவும் அவர் நம்பிக்கை தெரிவித் தார்.

புலிகளின் விமானம் மோதியமையினால் சேதமடைந்திருந்த தேசிய இறைவரித் திணைக்கள கட்டடத்தை பார்வையிட வந்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித் ததாவது,

புலிகளின் விமானம் கட்டடத்தின் 12ஆவது மாடியில் மோதியுள்ளதோடு, கட்டடத்திற்கு பாரிய சேதம் ஏற்பட்டுள்ளது.

ஆனால் இங்குள்ள கணனி மயப்படுத் தப்பட்ட தகவல்களுக்கு எதுவித பாதிப்பும் ஏற்படவில்லை.ஏனெனில் இந்தத் தகவல்கள் கட்டடத்தின் ஆறாவது மற்றும் ஏழாவது மாடியிலேயே உள்ளன.

தேசிய இறைவரி திணைக்களக் கட்டடத்திற் கான மின்சார விநியோகம் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அவற்றை சரிசெய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள் ளன.

எனவே இன்னும் இரண்டு நாட்களுக்குள் அலுவலக வேலைகளை ஆரம்பிக்க முடியும் என எதிர்பார்கிறோம் என அவர் கூறினார். (6)

# இனப்படுகொலையை நிறுத்த குரலெழுப்புங்கள்; தமிழக கட்சிகளிடம் இராமதாஸ் வேண்டுகோள்

(சென்னை)

இலங்கையில் நடைபெறும் இனப் படுகொலையைத்தடுக்க அனைத்துக் கட்சிகளும் முன் வரவேண்டும் என்று பாமக நிறுவனர் இராமதாஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து சனிக்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கையில்,

இலங்கைப் படைகள் வீசும் குண்டுகளால் அப்பாவித் தமிழ் மக்கள் அழிந்து வருகின்றனர் என்று பன்னாட்டு அமைப்பான மனித உரிமைக் கண்காணிப்பகம் தனது ஆய்வறிக்கையில் தெரிவித்துள்ளது.

முல் லைத்தீவு மாவட்டத்தில் ஏறக்குறைய 100 சதுர கி.மீ. பரப்புள்ள பகுதிக்கு விடுதலைப் புலிகள் இயக்கம் பின்வாங்கியதில் இருந்தே இலங்கைப் படையால் பாதிக்கப்படும் அப்பாவி மக்களின் எண்ணிக்கை வேகமாக குறைந்து வருகிறது.

அரசு அறிவித்துள்ள பாதுகாப்புப் பகுதிகளில் எஞ்சியுள்ள மருத்துவமனைகள் மீதும் எண்ணற்ற குண்டுவீச்சுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருவதாக மனித உரிமைக் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

போர் நடக்கும் பகுதியில் இருந்து 35 ஆயிரம் மக்கள் வெளியேறி விட்டார்கள் என்று இலங்கை அரசு ஏற்கனவே அறிவித்துள்ளது.

அடுத்த சில நாள்களில் போர் நடக்கும் பகுதியில் இருந்து எஞ்சியுள்ள 70 ஆயிரம் பேரும் வெளியேறிவிட்டார்கள் என்றும் விடுதலைப்புலிகள் மட்டுமே இருக்கிறார்கள் எனவும் கூறி இலங்கை அரசு ஏமாற்ற முயற்சிக்கிறது

பீரங்கிகள், டாங்கிகள் வானூர்திப் படையின் துணையுடன் 60 ஆயிரத்துக்கும்



மேற்பட்ட இலங்கைப் படைவீரர்களால் பெரும் தாக்குதல் நடத்தப்படலாம். ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்டோர் கொன்று குவிக்கப் படும் அளவுக்கு மனிதப் பேரழிவாக அது இருக்கும்.

பயங்கரங்களின் பயங்கரம் நடப்பதற்கு மத்திய அரசு இசைவளிக்கப் போகிறதா? அல்லது இந்த இனப்படுகொலையைத் தடுத்து நிறுத்த எல்லா வழிகளையும் அது பயன்படுத்தப்போகிறதா? என்பதே இப்போதைய கேள்வி. காலம் கடப்பதற்கு முன்பாக இதற்கு உடனடி யாக விடை தேவை என்பதே தமிழக மக்கள் எழப்பும் குரல். இதனை உணர்ந்து தமிழகத்தில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் இந்த ஆபத்தைத் தடுக்க முன்வர வேண்டும் என்று இராமதாஸ் கேட்டுக்கொண்டுள்ளார்.(6)

# இலங்கை அரசுக்கு நெருக்கடி கொடுக்க காங்கிரஸ் கூட்டணி அரசு தவறி விட்டது

## பாரதிய ஜனதா குற்றச்சாட்டு

(புதுடில்லி)

இலங்கை அரசுக்கு நெருக்கடி கொடுக்க மத்தியில் ஆளும் காங்கிரஸ் கூட்டணி அரசு தவறி விட்டது என்று பாரதிய ஜனதாக்கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

இது தொடர்பாக ஊடகவியலாளர்களுக்கு நேற்று முன்தினம் சனிக்கிழமை அக்கட்சியின் தலைவர் வெங்கையா நாயுடு நேர்கணால் வழங்கிய போது மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையில் இலட்சக்கணக்கான தமிழர்கள் சொந்த இடத்தை விட்டு துரத்தியடிக்கப்பட்டு உணவுக்கு கூட வழியில்லாமல் தவித்து வருகின்றனர்.

இலங்கைத் தமிழர்களின் இந்த நிலைமையைக் கண்டு ஒவ்வொரு இந்தியனும் உண்மையிலேயே வருத்தப்படுகின்றான் . ஆனால் இந்த பிரச்சினையில் இலங்கை அரசுக்கு நெருக்கடி கொடுக்கமத்தியில் ஆளும் காங்கிரஸ் கூட்டணி அரசு தவறி விட் டது.

தமிழர்களுக்கு போதுமான பாதுகாப்பு வழங்குமாறு உறுதியாக சொல்ல மறுக்கின்றது. இலங்கை பிரச்சினைக்கு எந்த ஒரு தீர்வும் காணாமலேயே வெளியுறவு மந்திரி பிரணாப் முகர்ஜி கொழும்புக்கு சென்று வருகிறார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் மீது யாருக்கும் எந்த வித அனுதாபமும் கிடையாது.

ஆனால் பாதிக்கப்பட்டுள்ள தமிழர்களின் நிலைமை குறித்து அனைவரும் கவலைப் படுகின்றர்.

ஆனால் அவர்களின் பிரச்சிளையை தீர்க்க மத்திய அரசு எதுவுமே செய்யவில்லை. இலங்கை இராணுவத்துக்கு தார்மீக ஆதரவு அளித்துவருகின்ற மத்திய அரசு இலங்கை இனப்பிரச்சினையில் விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

(6)

# சுப்பிரமணியசுவாமியை கைது செய்ய வேண்டும்

## தொல்.திருமாவளவன் தெரிவிப்பு

(சென்னை)

தி.மு.க அரசைக் கவிழ்க்கும் முயற்சியை பொலிஸார் மேற்கொள்கின்றனரோ?என்ற சந்தேகம் எழுவதாக விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் கூறினார். திமுக அரசைக் கலைக்க வேண்டும் என்ற நோக்கில் தமிழக்ததில் திட்டமிட்டு நடத்தப்படும் வன்முறைகளுக்கு பயப்படமட்டோம் என்று முதல்வர் கருணாநிதி கூறியிருந்தார்.

இந்த நிலையில் சென்னையில் செய்தியாளர்களிடம் நேற்று முன்தினம் தொல் திருமாவளவன் கூறியதாவது,

சென்னை உயர் நீதிமன்ற வளாகத்துக்குள் பொலிஸார் அத்துமீறி நுழைந்துள்ளனர். தலைமை நீதிபதியின் அனுமதியில்லாமல் ஆயுதம் தாங்கிய அதிர டிப்படையினர் உள்ளே



நுழைந்திருப்பதன் மூலம் அது திட்டமிட்ட தாக்குதல் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. இந்தச் சம்பவம் குறித்து சி.பி.ஐ விசாரணைக்கு உத்தர விட்டிருப்பது வரவேற்கத் தக்கது.

விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரனையும் தமிழக வழக்கறிஞர்களையும் சாதி பெயரைச் சொல்லி திட்டியுள்ளார் ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணிய சுவாமி. அவரை குண்டர் தடுப்புச் சட்டத்தில் கைது செய்ய வேண்டும்.

சென்னை மாநகர பொலிஸ் இணை ஆணையாளர் இராமசுப்பிரமணியன் மாற்றப்பட்டுள்ளார். அவர் மட்டுமல்ல உயர் நீதி மன்ற வளாக மோதல் சம்பவத்தில் தொடர்புடைய அதிகாரிகள் அனைவரும் இடைநிறுத்தம் செய்யப் படவேண்டும்.

சட்டக் கல்லூரி மாணவர் மோதல் சம்பவத்திலும் உயர் நீதிமன்ற வளாகத்திலும் பொலிஸார் அத்துமீறிசெயல்பட்டுள்ளனர். இதைப் பார்த்தால் திமுகஆட்சியைக் கவிழ்கும் முயற்சியில் காவல்துறை ஈடுபடுகிறது என்ற சந்தேகம் எழுகிறது என்றார். (6)

# சிறைக்கு செல்வதால் எந்த வருத்தமும் இல்லை

## சீமான் பேட்டி



(சென்னை)

இந்திய இறையாண்மைக்கு எதிராகப் பேசியதாக எழுந்த குற்றச்சாட்டின் பேரில் இயக்குநர் சீமான் கைது செய்யப்பட்டு புதுவை சிறையில் அடைக்கப்பட்டுள்ளர். சிறைக்குச் செல்வதற்கு முன்னதாக சீமான் நீதிமன்ற வளாகத்தில் நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது,

நான் தலைமறைவாக இருக்கிறேன் என்று கூறினார்கள். நான் தலைமறைவாக வில்லை. நெல்லையில் நடந்த பொதுக் கூட்டத்தில் ஆயிரக்கணக்கானவர்கள் மத்தியில் பேசினேன். கடலூரில் தமிழ்வேந்தன் என்பவர் மரணம் அடைந்தார். அவரது இறுதிச் சடங்கை முடித்த பிறகு பொலிஸில் சரண் அடையலாம் என்று நினைத்தேன்.

இந்த நிலையில் சட்டசபையில் அமைச்சர் ஆற்காடு வீராசாமி என்னைக் கைது செய்வதாகப் பேசியிருக்கிறார். அதனால் நான் சரண் அடைய வந்துள்ளேன்.

இந்திய இறையாண்மைக்கு எதிராக நான் பேசி விட்டதாக கூறுகிறார்கள். அப்படி நான் எதுவும் பேசவில்லை. இந்திய இறையாண்மையை மதிக்கக் கூடிய பற்றுள்ள பச்சைத் தமிழன் நான்.

இலங்கையில் போரை நடத்திக் கொண்டிருப்பது மத்திய அரசு, அந்தப் போரைப் பற்றி நான் மக்களிடையே சொல்லி வருகிறேன். அதனால் அவர்கள் என்னைக் கைது செய்ய வற்புறுத்தினார்கள். மத்திய அரசு விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே போட்டால் பேச்சுவார்த்தை நடத்தலாம் என்று கூறுகிறது. இது என்ன கருத்து. இது தமிழ் சாதிக்கு தேசிய இயக்கம் செய்யும் துரோகம்.

இலங்கைப் பாதுகாப்பு இயக்க தலைவர்கள் பழ.நெடுமாறன், வைகோ, தொல். திருமாவளவன் ஆகியோர் பேசாத பேச்சா நான் பேசிவிட்டேன். அவர்களுக்கு ஆதரவு இருக்கிறது. எனக்கு ஆதரவு இல்லை. நான் தனி மனிதன். அதனால் என்னை கைது செய்ய முயற்சி செய்கிறார்கள். தமிழ் சாதிக்காக, தமிழ் சாதி மக்களுக்காக சிறைக்குச் செல்ல தயாராக இருக்கிறேன். சிறைக்குச் செல்வதால் எனக்கு எந்த வித வருத்தமும் இல்லை.

நான் சிறைக்குச் சென்றாலும் தமிழ் சாதி இன உணர்வாளர்கள் போராட்டத்தை நடத்துவார்கள். இவ்வாறு இயக்குநர் சீமான் கூறினார். (6)

## பாரதச் செய்திகள்

# 14 அகதிகள் பாம்பன் வருகை

(இராமேஸ்வரம்)

இலங்கையில் இருந்து படகு மூலம் 14 அகதிகள் நேற்று முன்தினம் பாம்பன் வந்தனர். இதில் இலங்கை இளைஞர்கள் இருவர் தலைமறைவாகியுள்ளனர்.

இலங்கையில் போர் நடைபெற்றுவருவதால் மன்னார், வவுனியா ஆகிய இடங்களைச் சேர்ந்த 6 ஆண்கள், 4 பெண்கள் ,4 சிறுவர் சிறுமிகள் உட்பட 14 பேர் இலங்கையில் இருந்து படகில் புறப்பட்டு பாம்பன் தெற்கு கடற்கரைக்கு வந்தனர். படகை கரையில் நிறுத்திவிட்டு இருவர் தப்பிவிட்டனர்.

இது குறித்து பாம்பன் காவல் நிலையத்தில் அகதிகளிடம் உளவுப் பிரிவு பொலிஸார் நடத்திய விசாரணையில் படகோட்டிகளான இரு இளைஞர்கள் படகை கரையில் நிறுத்தி விட்டு இரு இயந்திரங்களை கழற்றிக்கொண்டு பாம்பன் காட்டுக்குள் ஓடியதாகத் தெரிவித்தனர்.

தப்பியவர்கள் விடுதலைப்புலிகளாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் பொலிஸார் சோதனைச் சாவடியில் தீவிரமாக கண்காணித்து வருகின்றனர். (6)

இலங்கையில் போர் நிறுத்தத்தை வலியுறுத்தி விருதுநகர் தி.மு.க. இளைஞரணி சார்பில் மனித சங்கிலி போராட்டம் நடந்தது.



உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்பது அன்பாலும் ஒழுக்கத்தாலும் தெய்வ பக்தியாலும் தான்.

-சுவாமி இராமதாசர்

வலம்புரி

# சிவனுக்கொரு கடிதம்

இன்று சிவராத்திரி விரதம். மகிமையும், புனிதமும் மிக்க இவ் விரதத்தை உலகுவாழ் இந்து மக்கள் அனுஷ்டிக்கின்றனர்.

அகங்காரம் அழிந்தால் மட்டுமே சிவப்பரம் பொருளை அடைய முடியும் என்பது இவ்விரதத்தின் மூல தத்துவம்.

அதுமட்டுமன்றி, காத்தல் கடவுளாகிய விஷ்ணு வும், படைத்தல் தொழிலின் பொறுப்பாளியான பிரம்மாவும் விட்ட தவறுக்காக உலகப் பரம்பொருளாகிய சிவபெருமான் இருவருக்கும் தடைகாண் பரீட்சையை நடத்திய நிகழ்வையும் சுட்டி நிற்பதே சிவராத்திரி விரதத்தின் பொருளாகும். இவையெல்லாம் விரதத்திற்கான விளக்கம்.

ஆனால், தற்போதையை சூழ்நிலையில் சிவராத்திரி விரதத்திற்கான விளக்கம் தேவையில்லை. ஒருவருடத்தில் முந்நூற்று அறுபத்து நான்கு நாட்கள் உறங்கியவர்கள் ஒருநாள் விழித்திருந்து இந்த உலக இயக்கத்தின் காரண கர்த்தாவாகிய சிவப்பரம்பொருளை வணங்கி பிறவாமைப் பெரும்பேற்றை பெறுவதற்கான சிவராத்திரி விரதம் இன்று பொருள் இழந்து போயுள்ளது.

வன்னியில் போர்க்களத்தில் அகப்பட்ட மக்கள் ஒவ்வொரு நாளும் சிவராத்திரி விரதத்தையே அனுஷ்டிக்கின்றனர்.

தமக்கான மரணம் இன்றா? நாளையா? என்று தெரியாமல் அவர்கள் அந்தரிக்கின்றனர். ஐ.நா. சபையின் பிரதிநிதி வந்தும் இன்னமும் விடிவு கிடைக்கவில்லை.

இந்நிலையில் இன்று சிவராத்திரி விரதம் அனுஷ்டிக்கப்படுகிறது. இறைவா! சிவப்பரம் பொருளே! உன்னால் அன்றோ இந்த உலகம் இயங்குகிறது. நீயன்றி மனுக்குலத்தைக் காக்க யாரால் முடியும்?

நீதி ஒழிந்து அநீதி மேலோங்கி பாவ பூமியாக இந்த மண் மாறிவிட்டதால் அன்றோ உன் அருள் மானிடத்தைக் காக்க பின் நிற்கிறது.

ஒருபுறத்தில் மக்களின் அவலம். மறுபுறத்தில் வெடிகொளுத்தும் ஆரவாரம். இஃதென்ன நிதி? மானிடம் நெறிதவறியதால் உன் வரவை நிறுத்திக் கொண்டாயா இறைவா?

படைக்கலமாக உன் நாமத்து ஐந்தெழுத்தும் என்றுரைத்த ஞானிகள் பொய்யர்களா?

சிவாயநம என்று சிந்திப்பார்க்கு அபாயம் ஒருநாளும் இல்லை என்ற வாக்கு தோற்றுவிட்டதா இறைவா! சிவப்பரம்பொருளே வன்னியில் மரண ஓலமிடும் எங்கள் உறவுகளைக் காப்பாற்று. அதுவே சிவராத்திரியில் உந்தனுக்கு நாம் கேட்கும் விண்ணப்பம்.

# சிவராத்திரி விரத வழிபாடு மக்களுக்கு சுபீட்சத்தை தரட்டும்

## யாழ். படைத்தளபதி ஆசிச் செய்தி

(யாழ்ப்பாணம்)

மகா சிவராத்திரியை யொட்டி யாழ்.பாதுகாப்புப்படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் எம்.சீ.எம்.பீ.சமரசிங்க யாழ். மக்களுக்கு ஆசிச் செய்தியை விடுத்துள்ளார். அச் செய்தியில் அவர் தெரிவித்துள்ளதாவது;

ஆதி காலம் தொட்டு உலகம் பூராகவும் உள்ள இந்து பக்தர்கள் பக்தியுடன் கொண்டாடும் மகா சிவராத்திரி வைபவம் யாழ். பிரதேசத்தில் வாழும் இந்துக்களுக்கும் மிக முக்கிய வைபவம் என்பதை நான் அறிவேன்.

இன்றைய சிவராத்திரியை யாழ்.மக்கள் மட்டமின்றி உலக வாழ் இந்து பக்தர்கள் ஒன்றிணைந்து பயபக்தியுடன் ஒரே நேரத்தில் சிவபெருமானுக்கு நடத்தும் பூஜை வழிபாடுகள் மூலமும் உபவாசமிருந்தும் பக்தியை வெளிப்படுத்தி, சமூகத்தின் விடிவை, நல்லொழுக்கத்தை,மேம்பாட்டை வேண்டி நடத்தும் விஷேட வழிபாடுகளும்,வாழ்வு உய்ய சிவபெருமானை வழிபடுவதன் மூலம் உலகு உரிய முறையில் இயக்க சக்தியும் கிடைக்கப் பெறுகிறதென்பது தொன்று தொட்டு இன்றைவரை கொண்டுள்ள நம்பிக்கையாகும்.

இவ்வாறு சிவனை வழிபடும் யாழ்.இந்து பக்தர்கள் பிரார்த்திப்பதும் நாட்டின் ஏனைய மதத்தலைவர்களும் தமது மத அனுபாணங்களின் படி வேண்டுவதும் ஒரே பிரார்த்தனையை ஆகும்.

நாம் நாட்டில் வாழும் சமூகங்களின் சமய கலாசார வழிபாடுகள் வேறுபட்டாலும் அவர்களுக்குள் உள்ள எண்ணங்கள், கருத்துக்கள் பிணைந்திருப்பது அவர்களின் சகோதரத்து வத்தை எடுத்துக் காட்டுகிறது.

இன்று நீங்கள் கொண்டாடும் மகா சிவராத்திரியின் பயனால் உங்கள்மேன்மையான எண்ணங்கள் நிறைவேறி உங்கள் வாழ்வு சௌபாக்கியமுள்ளதாக ஆகுவதற்கும் சிவனின் அருளால் அனைவருக்கும் சமாதானமும் சௌபாக்கியமும், நற்சுகமும்,நீண்ட ஆயுளும்,சிறந்த எதிர்காலமும் மலர வேண்டும் என்றும் பிரார்த்திக்கிறேன். உங்கள் அனைவருக்கும் சிவனின் ஆசிகள் கிடைக்கட்டும் (ந)

# உலகளாவிய கிறிஸ்தவ சமூகத்திற்கு வன்னியில் இருந்து அவசர அறைகூவல்

## அருட்பணியாளர்கள் அனுப்பிவைப்பு

எமக்கு பிரியமான தமிழ்,சிங்களம்,ஆங்கிலம் மற்றும் வேறு மொழிகளைப் பேசும் கிறிஸ்தவ சகோதர சகோதரிகளே, நாம் ஆதரிக்கும் சர்வ வல்லமையுள்ள இறைவனின் திருப் பெயரில் நாம் வன்னியிலிருந்து கொண்டு இந்த அவசர அறைகூவலை விடுக்கின்றோம் என வன்னி அருட் பணியாளர்கள் சார்பாக அருட்திரு க.சாம் இராஜேந்திரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அருட்பணியாளர்கள் சார்பாக அருட்திரு க.சாம் இராஜேந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது;

வன்னியில் வாழும் எங்கள் வாழ்வு கேள்விக்குறியாகி, உயிர் ஊசலாடிக்கொண்டிருக்கும் நிலையிலையே நாம் உங்களுக்கோர் அவசர அறைகூவலை விடுகின்றோம்.

நிம்மதியும் நிரந்தர வாழ்வும் தொலைந்து போன நிலையில் மரணத்தின் விளிம்பில் நின்றுகொண்டு இறுதி மூச்சை பிடித்த படியே அனைத்துலக கிறிஸ்தவ சமூகத்திற்கு இந்த அவசர அறைகூவலை விடுக்கின்றோம்.

கொடிய போர் ஒன்று நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. விடுதலைப் புலிகள் விடுதலைப்புலிகளாகவே இருக்க,விடுதலைப் புலிகளை அழிக்கின்றோம் என்ற பெயரில் அரசால் தமிழ் மக்கள் நாள் தோறும் மிகவும் மோசமானமுறையில் கண் கொண்டு பார்க்க முடியாத வகையில் கொன்று குவிக்கப்படுகின்றனர்;காயப்படுத்தப்படுகின்றனர்.

வானூர்தி மற்றும் எறிகணை வீச்சால் உடல் சிதறிப் பலியாகும் மக்களின் உடல்களை உரப்பைகளில் (பயிர் செய்கைக்கு பயன்படுத்தப்படும் இரசாயன உரம்கொண்டிருந்த பைகள்) அள்ளியெடுக்கும் அந்த நெஞ்சைப் பிழியும் கோரக் காட்சிகளை எப்படிமறப்பது? தன் தகப்பனின் சிதறிய உடலை ஒரு பையில் அள்ளி யெடு த்த 16 வயது மகனின் மனநிலையை எப்படி எழுதுவது?

உடல் சிதறி பலியானவர்களையோ அல்லது காயமடைந்தவர்களையோ அந்த இடங்களில் இருந்து அப்புறப்படுத்தவோ காயப்பட்டவர்களுக்கு உதவுவதோ மிகவும் கடினமான விடயமே.

மழை போல் விழும் இந்த எறிகணைகளின் மத்தியில் மீட்பு பணிகளை எப்படி செய்ய முடியும்? இவை அரசால் பாதுகாப்பு வலயம் என அறிவிக்கப்பட்ட பிரதேசங்களுக்குள் நடைபெறுகின்றன.

அனைத்துலக செஞ்சிலுவைச்சங்கத்தின் வெளிநாட்டு பிரதிநிதிகளையும் அரசாங்கம் வெளியேற்றி விட்டது. தொண்டு நிறுவனங்களோ ஐக்கிய நாடுகள் சபையின் பிரதி நிதிகளோ இங்கு இல்லை .

இங்கு மக்கள் மிகவும் கொடூரமான முறையில் கொல்லப்படுகின்றனர். காயப்படுத்தப்படுகின்றனர். அதிலும் கர்ப்பிணி தாய்மார்களும் குழந்தைகளும் சிறுவர்களும் மிகவும் கோரமான முறையில் கொல்லப்படுவதை வார்த்தைகளால் விளக்கவே முடி யாதுள்ளது.

மன நிலை பாதிக்கப்பட்ட சிறுவர்களையும் பெண்களையும் உடல் வலிமை குறைந்தவர்களையுமே அதிகம் காணக் கூடியதாகவுள்ளது.

ஐயோ கடவுளே என்று எழும் கூக் குரல்கள் எறிகணைச் சத்தங்களையும் மிஞ்சி கேட்ட வண்ணமே உள்ளது.

இவற்றை எல்லாம் நாம் போர் நடைபெற்றுக்கொண்டிருக்கும் இடத்தில் இருந்து கொண்டு நேரடியாகவே பார்க்கின்றோம். மருத்துவ, உணவு மற்றும் அடிப்படை வசதிகள் இன்றி மக்கள் நாள் தோறும் ஓடிக்கொண்டே இருக்கின்றனர். நாள்தோறும் நிமிடம் தோறும் இந்த மக்கள் துன்புறுகின்றனர். இரவு பகலாக உறங்க முடியாமல் தவிக்கின்றனர்.

போரின் வலிமையையும் வலியையும் தாங்க முடியாமல் தவிக்கின்றனர். போர் நிறுத்தம், பேச்சு வார்த்தை, சமாதானம் என்ற நிலைப்பாட்டை அனைத்துலகம் எதிர்பார்த்த வண்ணம் மக்கள் சாவின் விளிம்பில் உள்ளனர். சிறிலங்கா அரசே சகல கதவுகளையும் இழுத்து மூடியுள்ளது.

தமிழ் மக்கள் அதனைத் திறக்கும் பலமான கரங்களாக இந்திய மத்திய அரசையும் அமெரிக்காவையும் ஐக்கிய நாடுகள் சபையையும் பார்த்துக்கொண்டிருக்கின்றனர்.

இந்த கரங்களை செயற்படவைப்பது யார்? இதனைச் செயற்பட வைக்கக்கூடியவர்களாக இறைவனால் இந்த பூமியில் நிலை நிறுத்தப்பட்டுள்ள உலகளாவிய கிறிஸ்தவ சமூகத்தையே நாம் முன்மொழிகின்றோம். அதுவே உண்மையும் கூட. இந்த நேரத்தில் கிறிஸ்தவர்கள் யாவரும் கிறிஸ்தவ திருமறையிலுள்ள எஸ்தர் புத்தகத்தை படிக்க வேண்டும். எஸ்தரைப் போல் உடன் விரைந்து செயற்பட வேண்டும்.

இலங்கைத்தீவில் சிங்களம் மற்றும் தமிழ் என்னும் இரு தேசிய இனங்கள் வாழ்கின்றனர். இதில் சிங்கள தேசிய இனம் தனது வாழ்வியல் உரிமைகளையும் இறைமைகளையும் தன்னகத்தே கொண்டு வாழ்கின்ற அதே சமயம், தமிழ்த் தேசிய இனத்தின் வாழ்வியல் உரிமைகளையும் இறைமைகளையும் மறுத்து இன்று அந்த இனத்தை அதன் மண்ணிலே ஏதிலிகளாக்கி கொன்று குவித்து வருகின்றது.

இதற்கு பயங்கரவாதத்தை அழிக்கின்றோம் என்ற பெயரையும் கொடுத்துள்ளது. ஆனால் இதனை அனைத்துலக சமாதான விரும்பிகளான மெய்யான கிறிஸ்தவர்கள் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. அதே சமயம், ஜெபிக்கின்றோம், மன்றாடுகின்றோம், வேண்டுதல் செய்கின்றோம் என்று மட்டும் கூறிவிட்டு இருந்திட முடியாது.

எனவே சிங்கள மொழி பேசும் கிறிஸ்தவ சகோதர சகோதரிகளே நீங்கள் பௌத்த சிங்கள அரசிற்கு அச்சப்பட வேண்டாம்.

நீதிக்கு முகம் கொடுங்கள் . சிங்கள தேசிய இனம் போல் தமிழ் தேசிய இனமும் எல்லா வாழ்வியல் உரிமைகளுடனும் இந்த தீவில் வாழ நீதிக்காக போராடுங்கள். அனைத்துலகம் எங்கும் உள்ள தமிழ் கிறிஸ்தவர்கள் ஈழத் தமிழர்கள் என்னும் பெயரில் குரல் கொடுக்கிறீர்கள் என்பதை நாம் அறிவோம். ஆயினும் நீங்கள் உங்கள் அனைத்து வல்லமையையும் பயன்படுத்த வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கின்றோம்.

அனைத்துலக கிறிஸ்தவ சமூகம் என்ற பெயரில் எழுந்து செயற்பட வேண்டும் என்று நாம் எதிர்பார்கின்றோம். சகல கிறிஸ்தவ மொழி பேசும் கிறிஸ்தவ சகோதர சகோதரிகளையும் ஒன்றிணைந்து செயற்படும் படியாக நாம் கேட்கின்றோம்.

நிம்மதியாக வாழ்ந்து சுதந்திரக்காற்றைச் சுவாசிப்போர் மரணத்தின் பிடியில் சாவின் விளிம்பில் நின்று அவலப்படும் சகோதர சகோதரிகளைக் காக்க எழாதிருக்க முடியுமோ? அனைத்துலக கிறிஸ்தவ சமூகமே உங்கள் உறவுகள் சகோதர சகோதரிகள் சார்பில் கேட்டுக்கொள்கிறோம். உடன் விரைந்து செயற்படுங்கள். இறைவன் உங்களை ஆசீர்வதிப்பார்களாக என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச-5)

# சுவாமி விவேகானந்தரின் ஆளுமை வளர்ச்சி

## மன ஒரு மைப்பாட்டின் ஆற்றல்



மன ஒருமைப்பாட்டை வளர்க்க முடியுமா? அதற்கு நாம் எஜமானர்களாக முடியுமா? இது தான் கேள்வி. முடியும் என்கிறார்கள் யோகிகள். மனத்தை முற்றிலுமாகக் கட்டுப்படுத்தலாம் என்பது அவர்கள் கூற்று. நீதிநெறி நோக்கிலிருந்து பார்த்தால் இதில் ஓர் அபாயம் இருக்கிறது. மனத்தை ஒரு பொருளில் குவிக்கிறோம். ஆனால் நாம் விரும்பும் போது அதை விலக்க முடிவதில்லை. இந்த நிலை பெருந் துன்பங்களை உருவாக்குகிறது இந்த விலக்கும் ஆற்றல் இல்லாதது தான் நமது பெரும்பாலான துன்பங்களுக்குக் காரணம். எனவே குவிக்கும் ஆற்றலுடன் விலக்கும் ஆற்றலையும் நாம் வளர்க்க வேண்டும் . அனைத்தையும் தவிர்த்து ஒன்றைப் பற்றும் திறன் வேண்டும்; ஒரு கணத்தில் மனத்தை அதிலிருந்து விலக்கி இன்னொன்றில் வைக்கவும் திறன் வேண்டும். இந்த இரண்டையும் சேர்த்து வளர்த்தோமானால் எந்த அபாயமும் இல்லை.

# முல்லைத்தீவில் இருந்து திருகோணமலைக்கு 4ஆம் கட்டமாக அழைத்து வரப்பட்டோர் விபரம்

ஆர்.நசந்தநாயகி- முல்லைத்தீவு, (வயது 57), இராசரத்தினம்-(முல்லைத்தீவு, (வயது 58), யு.சஜீவன்-தேவிபுரம், (வயது4), யு.கஜீவன்-தேவிபுரம், (வயது6),யு.ராகினி-தேவிபுரம்,(வய28),யு.பூமிகா-தேவிபுரம், (வயது 18), தவராசாஉதயகுமார்-கிளிநொச்சி, (வயது26),மேரிரீற்றா-மத் தளன் (வயது 55),ஆர்சுப்பிரமணியம்-கிளிநொச்சி (வயது 77),எவ்.ஜோர்ஜ்-கிளிநொச்சி (வயது63).

எம்.ஜெயமலர்-கிளிநொச்சி(வயது59), ஜெ.அன்னமலர்-புதுக்குடியிருப்பு (வயது 52), ஏ.அற்புதமலர்-இரணைப்பாலை (வயது30), ரி.யதுர்ஜன்-கோம்பாவில் (வயது7),ரி.வணிதா-கோம்பாவில்,(வயது27), ரி.அர்சிகா-கோம்பா வில்(வயது3), எஸ்.சிவகாமி-முத்தையன்கட்டு (வயது3), எம்.பொன்னம் பலநாதன்-கிளிநொச்சி,(வயது83), எஸ்.நல்லையா-மாத்தளன்(வயது49), கே.கருணேஸ்வரன்-தேவிபுரம் (வயது4),எஸ்.வடிவாம்பாலி-கிளிநொச்சி (வயது63),நிரோஜன்-மாத்தளன்(7மாதம்).

பிரிங்கி-மாத்தளன் (வயது29), ஆர்.சுந்தரி-நடுகாணி(வயது47),ஏ.வசந்தி-(நாச்சிக்குடா, (வயது33),ஏ.அனேஜா-நாச்சிக்குடா(வயது3),எம்.பெரியசாமி-முழங்காவில் (வயது60), எஸ்.சிவதர்சினி-மாத்தளன் (வயது32), எஸ்.பவித்திரன்-மாத்தளன் (வயது1),எஸ்.டோசிகா-மாத்தளன் (வயது4), இராஜரத்னம்-(வயது31), எம்.தயா னந்தன்-திருகோணமலை (வயது34).

சிவநாதன்-யாழ்ப்பாணம்(வயது9), என்.இராமன்-முள்ளியவளை (வயது26), ஐ.நிரஜா-முள்ளியவளை (வயது21),எம்.தங்கமணி-முள்ளியவளை(வயது56),எஸ்.கதிரவெளி-பரந்தன்(வயது80),சந்தசரோஜினி-முள்ளியவளை(வயது49),என்.பரமேஸ்வரன்-விஸ்வமடு(வயது59),எஸ்.விபுலா-முல்லைத்தீவு (வயது8), எஸ்.மகாலட்சுமி-மணியங்குளம் (வயது82).

கே.பிரியா-மாத்தளன் (வயது3), கே.பரமலோகினி-மாத்தளன்(வயது38), கே.சுப் பிரமணியம்-மாங்குளம் (வயது64), என்.சீதாதேவி-யாழ்ப்பாணம், (வயது 66),கே.கத்திரினா-ஆண்டான்குளம் (வயது66), எம்.சக்திவேல்-பாண்டியங்குளம் (வயது71), கே.நாகமுத்து-பரந்தன்(வயது 73),ரி.செல்லக்கண்டி-பொக்கனை (வயது67), கே.சுரேஸ்- கிளிநொச்சி (வயது 33),பி.நிதர்சன்-முள்ளியவளை (வயது26),ஆர்.கவிதா-வற்றாப்பளை (வயது 35),ஆர்.மதுசுதன்-வற்றாப் பளை(வயது4).

ரி.கார்த்திகா-வற்றாப்பளை (வயது2), எஸ்.பாலசுந்தரன்-கிளிநொச்சி (வயது53), சி.கோவிந்தப்பிள்ளை-வட்டக்கச்சி (வயது 70),ரி.கிர்த்திகா-பூநகரி(வயது 12),தமிழ்நேசன்-கிளிநொச்சி (வயது42), என்.நந்தகுமார்-கிளிநொச்சி (வயது17), எஸ்.கிருபாஜினி-இரணைப்பாலை(வயது31).

எஸ்.லக்ஷனா-இரணைப்பாலை (வயது 21/2),ரி.கனகசபை-முத்தையன் கட்டு(வயது 82),பி.இராமன்-முத் தையன்கட்டு(வயது 70),எஸ்.விஸ்வரூபி-பாலமோட்டை (வயது18), எஸ்.மதிவதனி-கிளிநொச்சி (வயது 26),லிகிர்தன்-கிளிநொச்சி (வயது40),யு.விச்சன்-புதுக்குடியிருப்பு(வயது4),நிசாதினி-புதுக்குடியிருப்பு (வயது24).

ஐ.புவனலோஜன்-யாழ்ப்பாணம் (வயது 29),ஐ.கீர்த்திகா-புதுக்குடியிருப்பு (வயது3), ஐ.கோகிலா-புதுக்குடியிருப்பு (வயது 26),தர்சிகன்-புதுக்குடியிருப்பு (வயது4), கணேஸ் வரி-கொக்குத்தொடுவாய் (வயது29), பி.நாக லிங்கம்-வட்டக்கச்சி(வயது72), ஆர்.பிரியா-புதுக்குடியிருப்பு(வயது10),ஆர்.ரேஸ்வரி-புதுக்குடியிருப்பு(வயது35),ஆர்.குமரன்-புதுக்குடியிருப்பு(வயது11),ரி.சுப்பிரமணியம்-முள்ளியவளை(வயது48),எஸ்.மனோரஞ்சிதன்-பாலமோட்டை(வயது46),என்.சரோஜினி-முள்ளிக்குளம்(வயது55).

கே.சிதாவிப்பிள்ளை-வட்டக்கச்சி (வயது 60),ஜே.ராகல்-கிளிநொச்சி(வயது6),சாந்தி-கிளிநொச்சி, வயது37),ஆர்.தனுசன்-கிளிநொச்சி(வயது15),ஆர்.தனுசன்-கிளிநொச்சி (வயது10),ஆர்.அபிஷா-(வயது11), எஸ்.ரவிதாசன்-கிளிநொச்சி (வயது38),எஸ்.கௌரி-கிளிநொச்சி(வயது33), எஸ்.வசந்தாதேவி-கிளிநொச்சி(வயது50),அனோஜா-கிளி நொச்சி (வயது11/2).

பி.புஷ்பலாதா-திருகோணமலை (வயது 14),என்.நாகலகாண்டீபன்-மல்லாவி, (வயது 23), என்.தனலட்சுமி-புதுக்குடியிருப்பு (வயது 53),சிவமயம்-கிளிநொச்சி (வயது70), சிந்துஜன்-கொடிகாமம்(வயது9), சிரஞ் ஜீவி-கொடிகாமம் (வயது7),எஸ்.ரங்குமார்-வற்றாப்பளை(வயது40),எம்.சிவகரன்-கொடிகாமம் (வயது38).

சிவசெந்தூரன்-கொடிகாமம்(வயது5), ஆர்.கமலேஸ்வரி-கிளிநொச்சி,(வயது 58),எம்.விகேஸ்வரி-முறிகண்டி (வயது28), எஸ்.கமலாதேவி-கிளிநொச்சி(வயது65), கனகதுரைசிங்கம்-நீர்வேலி, ஐ.நாகதர்சினி- கிளிநொச்சி (வயது26),கே.தர்சன்-நீர்வேலி (வயது7), ரி.விஜயகுமார்-வவுனிக்குளம் (வயது33), வி.விதுர்சிகா-வவுனிக்குளம் (வயது3),விநாயகமூர்த்தி-மல்லாவி (வயது 63),வி.சுகிர்தா-வவுனிக்குளம் (வயது30), ரி.சுபாசினி-(வயது 35), எஸ்.சிவாஜினிதேவி-விஸ்வமடு (வயது35).

எஸ்.சிவச்செல்வம்-விஸ்வமடு (வயது3), எஸ்.தனபாலசிங்கம்-தேவிபுரம்(வயது62), தங்கமுத்து-இரணைப்பாலை(வயது67), கொரிசா-,ஐ.ரவீந்திரா-கருயுக்கேணி, (வயது 43),ஆர்.ரதன்-கருயுக்கேணி (வயது2), எம்.உதயச்சந்திரா-கொழும்பு,(வயது42), வி.உமா-கொழும்பு (வயது16), கே.சிவபா லன்-புதுக்குடியிருப்பு(வயது60), ஆர்.ராஜன்-மல்லாவி (வயது 25), ஆர்.துலக்சி- மல் லாவி(வயது1 1/2), ஆர்.மலர்விழி-திருகோண மலை (வயது19), எம்.தியாகராஜன்-புத்தூர் (வயது64),கே.வட்டியம்மா.

வை.இமிலியான்பிள்ளை-மன்னார், (வயது53),ஐ.எலிசபத்-மன்னார் (வயது 50), பி.சசிதரன்-புதுக்குடியிருப்பு (வயது31), ரி.பேரின்பநாதன்-புதுக்குடியிருப்பு(வயது 58),பி.சுதர்ஷன்-மல்லாவி(வயது5), பி.ஜானி-மல்லாவி(வயது4), பி.சுசிசலா தேவி-மல்லாவி (வயது30),பி.ரோஹுகா-மல்லாவி(வயது3), ரி.பரமலிங்கம்-இறைப் பைக்களம்(வயது30), வி.நிகதன்-ஜெயந்தி நகர்(வயது11),வி.வினாதா-ஜெயந்திநகர் (வயது26),எஸ்.ஸ்ரீவதனி-புதுக்குடியி ருப்பு(வயது36).

எஸ்.யதீசன்-புதுக்குடியிருப்பு, (வயது 15), எஸ்.தமிழ்க்குமரன்-மாத்தளன்(வயது 10), ஜே.ஜெயலக்சுமி-மாத்தளன் (வயது 56), எஸ்.அன்புக்குமரன்-மாத்தளன் (வயது6), எஸ்.சண்முகராஜா-அக்கராயன்குளம் (வயது 47),உமாசங்கர்,ஜே.திவ்யன்-(வயது7), ஜே.திலக்சன்-(வயது2), ஜே.புஸ்பலாதா-மல்லாவி (வயது36).

ஜே.திலக்சிகா-மல்லாவி, (வயது5), கே.புலோகநாயகி-முள்ளியவளை (வயது 67),எஸ்.ரி.ஐராங்கினி-வங்காலை(வயது 32),எல்.சந்திரதேவி-சம்பூர், (வயது43), எல்.பிரவீன்-சம்பூர்-(வயது6),எஸ்.ராஜ வதனி-கிளிநொச்சி (வயது29),எஸ். அருண் கீதன்-கிளிநொச்சி (வயது7), வி.மதுசன்- கிளிநொச்சி (வயது5),வி.விதுசன்-கிளி நொச்சி (வயது7), வி.யதுசன்-கிளிநொச்சி (வயது4),வி. ஜெயதுபா-மாத்தளன் (வயது 25),ரி.அருள்சோதி நாதன்-யாழ்ப்பாணம் (வயது45),ரி.தருசன்-திருகோணமலை (வயது4),ரி.வினுஷன்-திருகோண மலை (வயது3),ரி.தரணி-திருகோணமலை (வயது 30),பி.நடராஜா-கிளிநொச்சி (வயது 53),பி.தர்மராஜா-மஸ்கெலியா (வயது29, கேபிரதீபன்-புத்தூர்(வயது 33),கே.சரஸ்வதி-கிளிநொச்சி, (வயது66),ஐ.சின்னத்துரை-கோம்பாவில் (வயது60).

எஸ்.சத்தியபாமா-நடுகானி (வயது 28), எஸ்.அங்கணி-நடுகானி(வயது3), என்.கார்த்திகேசு-இரணைப்பாலை (வயது 67),ஏ.நடோசகுமார்-புதுக்குடியிருப்பு (வயது 40),ரி.ரேஷ்வரன்-பாயக்குளம் (வயது75), ரி.பாகமன்-திருகோணமலை (9மாதம்), ரி.தனிநாயகம்-கொழும்பு (வயது73), என்.தயா பாலன்-நடுகானி(வயது50).

ரி.யோகநாதன்-புதுக்குடியிருப்பு (வயது76),எஸ்.மனோன்மணி-கிளிநொச்சி (வயது71),பி.பிரிந்தா-புத்தூர்(வயது 27), பி.கதிரிச்சில்யன்-புத்தூர் (வயது1), ஜெ.துவராஜன்-புதுக்குடியிருப்பு(வயத11/2),என்.டினோயா-புதுக்குடியிருப்பு(வயது8), எம்.வசந்தநாயகி-புதுக்குடியிருப்பு(வயது31),எஸ்.யாசோதரன்-முத்தையன்கட்டு (வயது31).

கே.கணேசமூர்த்தி-முல்லைத்தீவு (வயது61),ஜே.பானுயா-கிளிநொச்சி (வயது 6),ஜே.புஸ்பஜீவா-கிளிநொச்சி(வயது30), ஜே.பூமிகா- கிளிநொச்சி (வயது 5) ஜே.பவித்திரா-கிளிநொச்சி(வயது9), எஸ்.ஜெயரூபன்-யாழ்ப்பாணம்(வயது35), என்.செல்லையா-யாழ்ப்பாணம்(வயது 60), எம்.விமலகுரு-இரணைப்பாலை (வயது56), சின்னையா-கிளிநொச்சி(வயது83).

என்.நடேசமூர்த்தி-முழங்காவில் (வயது 42),எஸ்.முத்துலிங்கம்-முல்லைத்தீவு (வயது 78),ஆர்.பூரணம்-கிளிநொச்சி (வயது 56),சி.சிவகணநாதன்-இரணைப்பா லை(வயது 65),எஸ்.பூபதி-கிளிநொச்சி (வயது 63),எஸ்.கந்தசாமி-சாவகச்சேரி (வய63). சர்வேஸ்வரன்-முல்லைத்தீவு(வயது26),ஜெயமலர்-முல்லைத்தீவு (வயது25), எஸ்.தனுஜன்-முல்லைத்தீவு (வயது2).

சரஸ்வதி- மாங்குளம் (வயது51), கே.தங்கசொரூபி- சாவகச்சேரி (வயது55), பி.வசந்தமலர்- இராமநாதபுரம் (வயது31), பி.நிவேதா-இராமநாதபுரம்(வயது6),பி.ஜிதுஷன்- இராமநாதபுரம்(வயது5),வை.தர்மசீலன்-தர்மபுரம் (வயது16),வை.விக்னேஸ்வரி -தர்மபுரம் (வயது33),ஆர்.யோகேஸ்வரி -மாங்குளம் (வயது50),எ.பெனான்டோ -கிளிநொச்சி (வயது54),எ.பாக்கியம் -கிளிநொச்சி (வயது67), எஸ்.கனகாம்பிகை -முத்தையன்கட்டு (வயது 63),ரி.செல்வரஞ்சிதம் -தாழையடி (வயது60), எஸ்.சின்னம்மா -உடையார்கட்டு (வயது 68), எஸ் .சிவராணி- உடையார்கட்டு (வயது 50), வி.இராசமலீர்-மல்லாவி (வயது 55) ,எஸ். சண்முகம்-உருத்திரபுரம்(வயது 54),ஆர் பொன்னுத்துரை-யாழ்ப்பாணம்(வயது 70),பி.கனகமணி- முள்ளியவளை (வயது 62),வி.சிவகுரு-நெடுங்கேணி(வயது 57).

வி.சிந்துஜன்-மல்லாவி(வயது 1 1/2) ,ஆர்.சிவஞானம் -மல்லாவி(வயது 59),வி.மிருதுளா- இரணைப்பாலை (வயது 44),பி.அபிஷங்கா -இரணைப்பாலை (வயது 9),எம். சின்னத்தம்பி -முத்தையன்கட்டு (வயது 72),பி.பிச்சைமுத்து -முழங்காவில்(வயது69).

சின்னராஜா-ஆனந்தபுரம்(வயது 36),எஸ்.விஜயதர்சினி-ஆனந்தபுரம்(வயது 27),கே.சசிக்குமார்-முல்லைத்தீவு(வயது 34),பி.கடம்பஜனனி-இரணைப்பாலை (வயது 36),பி.அபினயா- இரணைப்பாலை (வயது 3),பி.காந்திமதி-வவுனிக்குளம்(வயது 69),சங்கரசா-யாழ்ப்பாணம் (வயது 39),செந்துஜன்-விஸ்வமடு (வயது 17),எஸ்.தயானந்தினி-ஆனந்தபுரம் (வயது 31),தமிழரசி-ஆனந்தபுரம் (வயது 9 மாதம்)தனுஷானந்தன்-ஆனந்தபுரம் (வயது 9),கே.அசிந்திரா-விஸ்வமடு (வயது 11/2),கே.தர்சினி-விஸ்வமடு(வயது 30).

கே.ஆதித்தியா-விஸ்வமடு (வயது 4) ,பி.மதுஜன்னை- வவுனிக்குளம் (வயது 35),ரி.விமலாதேவி -கிளிநொச்சி (வயது 61),சிவபாக்கியம் -கிளிநொச்சி (வயது 84),கமலசிங்கம் -யாழ்ப்பாணம்(வயது56),சூரியகுமார்-கிளிநொச்சி (வயது 32),கே.விமலா-விஸ்வமடு (வயது24), எம்.நிரஞ்சனி-மிருசுவில்(வயது 31),எஸ்.அனுஷன் -மிருசுவில் (வயது1),எஸ்.தினோசன்-கிளிநொச்சி,சந்திரவதனி-கிளிநொச்சி (வயது 34),ஏ.பிரகாஷ்-உடையார்கட்டு (வயது14), ஏ.வாசுகி- மூங்கிலாறு(வயது 30),எஸ்.சனுஜா-மூங்கிலாறு(வயது 2), எ.பிரதீபன்-மூங்கிலாறு (வயது 7) ,ஜெயபாலன்-முழங்காவில் (வயது 30),எஸ்.சசிக்குமார்(வயது37), சனோஜ்-(வயது5),கணபதிப்பிள்ளை -முள்ளியான் (வயது 58),புஸ்பலதா-யாழ்ப்பாணம் (வயது 38),சதீஸ்-கோண்டாவில் (வயது 7மாதம்), எஸ்.அபிநிலா-கோண்டாவில் ,சதீஸ் -கோண்டாவில்,சதீஸ்-கொட்வின் -யாழ்ப்பா ணம்.

தனுசன்-ஆனந்தபுரம்,என்.கௌரி நாதன்-வவுனியா (வயது 26),சிவராணி-கிளிநொச்சி (வயது 29), குகப்பிரியா- கிளிநொச்சி, குபேந்தன்-கிளிநொச்சி(வயது 6),குகப்பிரியன்-கிளிநொச்சி (வயது9), லூத்தம்மா-(வயது 55), குணபாலசிங்கம் -வட்டக்கச்சி(வயது 34), செல்வராணி-முல்லைத்தீவு (வயது 51), தர்சினி-கனகபுரம்-(வயது 30),எஸ்.சயிந்தன்-கிளிநொச்சி (வயது2).

ஸ்ரீவித்யா-புதுக்குடியிருப்பு (வயது30), உதயகுமார் -கிளிநொச்சி(வயது 41) ,கணபதிப்பிள்ளை- விஸ்வமடு (வயது52), கனகபிள்ளை- மருதங்கேணி(வயது 57),யோகேஸ்வரி- தாழையடி(வயது56),கே.சதாசிவம்-, தர்மரட்ணம்-கிளிநொச்சி(வயது87), விநாயகரன்-கிளிநொச்சி (வயது 21),தினுசன்-முல்லைத்தீவு (வயது 15).

சந்திரசேகரம்-யாழ்ப்பாணம்(வயது31), கேதீஸ்வரன்-ஸ்கந்தபுரம் (வயது 57),கே.ஜெயானந்தன்-இரணைப்பாலை (வயது 60),நாகேஸ்வரி-இரணைப்பாலை(வயது 56),யதுர்சனா-இரணைப்பாலை (வயது 5),ஜெயந்தன்-கிளிநொச்சி(வயது 5) ,கிருஷ்ணபிள்ளை-கிளிநொச்சி (வயது 62),துசித்திரா-கிளிநொச்சி (வயது 12), தொம்ஷன்-கிளிநொச்சி (வயது3), எம். அன்ரனி- முள்ளியவளை (வயது 50).

நவரட்ணராஜா-முல்லைத்தீவு(வயது 50), புஸ்பவதி-கிளிநொச்சி (வயது 47) ,துஷ்யந்தன் -கிளிநொச்சி (வயது 6) ,லில்லி அக்னஸ்-புதுக்குடியிருப்பு(வயது 62) ,மதுசாந்தி-புதுக்குடியிருப்பு (வயது 13),இசாகீதன்-கிளிநொச்சி(வயது 8மாதம்) ,எம்.நதீஸ்கலா-கிளிநொச்சி(வயது 17),எம்.சுஜீபன்-கிளிநொச்சி (வயது14), வசந்தராணி- கிளிநொச்சி (வயது 43) ,வி.தயாபரன்-கிளிநொச்சி(வயது 31) ,ஸிஸ்சின்னத்துரை -நெடுங்கேணி(வயது36).

குமாரசாமி-நெடுங்கேணி(வயது 58) , இராசேந்திரன்-யாழ்ப்பாணம்(வயது3),என். சமோதா-முல்லைத்தீவு (வயது 27) ,ரி.குமாரதேவி-கிளிநொச்சி (வயது 42). கௌசிகன்-முல்லைத்தீவு (வயது13), எவரெஸ்ரா-முல்லைத்தீவு (வயது43),அருள்சேகரம் -முல்லைத்தீவு (வயது 29),பேதுருப்பிள்ளை -முல்லைத்தீவு (வயது 51),கதிரமலை-வெள்ளாங்குளம்(வயது 46),ஜெயந்தினி -முல்லைத்தீவு (வயது 31), சசிகரன்- ஆனந்தபுரம் (வயது 20),தவதர்சன்-முல்லைத்தீவு(வயது 14),இராசையா-மருதங்கேணி (வயது 63),அசோகமலா-ஓமந்தை (வயது 30),அன்னலட்சுமி-பரந்தன் (வயது 53),இந்திகா-வெள்ளாங்குளம் (வயது 13), சுயாதா-பரந்தன்(வயது 27).

சிவபாக்கியம்-புங்குடுதீவு (வயது 66), விதுசன்-செம்பியன்பற்று(வயது9) ,தயானி-செம்பியன்பற்று(வயது 13) ,ஜெயலக்சுமி -செம்பியன்பற்று(வயது 41) ,பிறதீக்- முல்லைத்தீவு (வயது 15),தேவராஜசிங்கம் -ஓமந்தை (வயது 52).

உதயகுமாரி -ஓமந்தை (வயது 46) ,சிந்துஜன்-ஓமந்தை(வயது 10) , புஷ்பலதா-முல்லைத்தீவு (வயது 59) , செல்வராணி -வட்டுக்கோட்டை(வயது 49) , செந்தில்வேல் -முல்லைத்தீவு(வயது 32),பிரியங்கா -செம்பியன்பற்று (வயது 16), வல்லிப்பிள்ளை -முள்ளியவளை (வயது 69), விஜயகுமாரி-புதுக்குடியிருப்பு (வயது 46) வள்ளியம்மா-ஓசில் திருகோணமலை(வயது 36).

லோகவர்சனி- ஓசில் திருகோணமலை (வயது 2மாதம்) வன்னிய சூரியன்-செம்பியன் பற்று (வயது 6), இராசபாலன்-இலச்சி(வயது 59), நாகேஸ்வரி(வயது 51) ,அரவிந்தன் -முல்லைத் தீவு(வயது31) ,ஏ.ரதனியா-முல்லைத்தீவு (வயது 29) ,ஏ.அனுஷன்-முல்லைத்தீவு (வயது8) ,இராசமணி -அராலி (வயது 60),மங்களேஸ்வரி-சுன்னாகம்(வயது 60), அனுசியா-இலச்சி(வயது15) , அனுஷாந்-சின்னவராயன்குளம்(வயது 7).


அர்ச்சனா-சின்னவராயன்குளம்(வயது 9), மனுராஜா-செம்பியன்பற்று (வயது 14), செல்லம்மா -பொன்னாலை (வயது 65), ஸ்ரீகாந்தி -வல்லிபுரம் (வயது 30) ,ரி.கஜீவன்-சுன்னாகம்(வயது 11), விஜயலட்சுமி -முல்லைத்தீவு (வயது 45) ,ரஜனி-சின்னவராயன்குளம் (வயது 32), சுரேஸ்குமார்-தாளையடி (வயது 22), தபோதினி-முள்ளியவளை (வயது 4) , ரஜனி-முல்லைத்தீவு (வயது36), சங்கீதன் -முல்லைத்தீவு(வயது8), கார்த்திகேஸ்வரி -இரணைப்பாலை (வயது40), விஜிகரன் -மல்லாவி (வயது 23), தினேஸ் கரன்-மல்லாவி (வயது 5), சரோஜினிதேவி -முள்ளியங்காடு (வயது 61),கிரிஷாந்த்-ஆனந்தபுரம் (வயது 11), விதுஷா-இயக்கச்சி(வயது 6), நவரட்ணராஜா -இயக்கச்சி(வயது35).

என்.திலு ஜன்-இயக் கச்சி (வயது 9) ,புவனா -தெல்லிப்பளை (வயது 5மாதம்),சசிகரன் -கிளிநொச்சி(வயது 12), கிருஷ்ணகுமாரி -கிளிநொச்சி(வயது 10), சுழாஜா-முழங்காவில் (வயது 23),உமாசங்கர்-கிளிநொச்சி(வயது5), புவனேஸ்வரி -இயக்கச்சி(வயது48) ,திவ்வியா-இயக்கச்சி (வயது2),யோகநாதன்- வவுனியா (வயது 49), பிரதீபா-மடு(வயது4),வளர்மதி-மடு(வயது 28).

அழகர்-கிளிநொச்சி (வயது53), எஸ்.ஸ்ரீஸ்கந்தராஜா-இணுவில் (வயது41) ,விமலாதேவி-முள்ளியவளை(வயது57) , பொன்னம்மா-இயக்கச்சி (வயது 33),சாகித்யா-மாங்குளம் (வயது7 மாதம்) ,நாகேஸ்வரி-மாங்குளம் (வயது60), தவம்-புதுக்குடியி ருப்பு(வயது 50), பாலசிங் கம்- மாங்குளம்(வயது 52) ,ஐங்கரன் -புதுக்குடியிருப்பு (வயது24) ,பாமினி-மாங்குளம் (வயது 27) ,ஆனந்தநீதன்-மடு (வயது 28), செல்வநாயகம்-யாழ்ப்பாணம் (வயது 52), தவனேஸ்வரி- புதுக்குடியிருப்பு (வயது 14).

# ஜெயவர்த்தனா 240; சமரவீர 231 இலங்கை முதல் இன்னிங்ஸில் 644

## 52 ஆண்டுகளின் பின் இணைப்பாட்ட சாதனை முறியடிப்பு



(காராச்சி)

அணித்தலைவர் மஹேல ஜெயவர்த்தனா-திலான் சமரவீர வின் சாதனை இணைப்பாட்டத்தின் மூலம் இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 7 விக்கெட்டுக் களையிழந்து 644 ஓட்டங்களை குவித்து ஆட்டத்தை இடைநிறுத் தியது.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடும் பாகிஸ்தான் அணி நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டநேர முடிபில் ஒரு விக்கெட்டையிழந்து 44 ஓட்டங்களை எடுத்திருந்தது.

பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்ட் நேற்று முன்தினம் கராச்சியில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிநேற்று முன்தினம் முதல் நாள் ஆட்டநேர முடிவில் அதன் முதலாவது இன்னிங்ஸில் 3 விக்கெட்டுக்களை எடுத்திருந்தது.

இந்நிலையில் இரண்டாம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு மஹேல ஜெயவர்த்தனா-திலான் சமரவீர ஜோடி சிறப்பான இணைப்பை வழங்கியது.

இதில் அணித்தலைவர் மஹேல ஜெயவர்த்தனா 355 பந்தில் தனது 5ஆவது டெஸ்ட் இரட்டை சதத்தை பூர்த்தி செய்தார்.

மறுமுனையில் திலான் சமரவீரவும் 287 பந்தில் தனது முதலாவது டெஸ்ட் இரட்டை சதத்தை பூர்த்தி செய்ய இலங்கை அணி 600 ஓட்டங்களைக் கடந்தது.

### 52 ஆண்டுகளின் பின் சாதனை முறியடிப்பு

இந்த ஜோடி நான்காவது விக்கெட்டுக்காக 412 ஓட்டங்களை எடுத்த போது 52 ஆண்டுகளின் பின் இணைப்பாட்ட சாதனையை முறியடித்தது. 1957ஆம் ஆண்டு மே 30 ஆம் திகதி மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கு எதிராக இங்கிலாந்து அணியின் மே.ஹவ்றே ஜோடி 4 ஆவது விக்கெட்டுக்காக 411 ஓட்டங்களை குவித்தமையே முன்னைய சாதனையாகும்.

இந்த ஜோடி 4 ஆவது விக்கெட்டுக்காக 437 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்தபோது அணித்தலைவர் மஹேல ஜெயவர்த்தனா 424 பந்துகளில் (32 பவுண்டரிகள் அடங்கலாக) 240 ஓட்டங்களை எடுத்து சொகைப் மலிக்கின் பந்துவீச்சில் விக்கெட் காப்பாளர் அக்மலிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து டில்சான் களமிறங்க மறு முனையில் திலான் சமரவீர 318 பந்துகளில் (31 பவுண்டரிகள் அடங்கலாக) 231 ஓட்டங்களை எடுத்து டினேஷ் கனேரியாவின் பந்துவீச்சில் நேரடியாக போல்ட் செய்யப்டு ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து பிரசன்ன ஜெயவர்த்தனா களமிறங்க மறுமுனையில் டில்சான் ஓட்ட மெதனையும் எடுக்காமல் சொகைப் மலிக்கின் பந்துவீச்சில் விக்கெட்காப்பாளர் அக்மலிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

இலங்கை அணி 614 ஓட்டங்களை எடுத்த நிலையில் அடுத்தடுத்து 3 விக்கெட்டுக்களையிழந்தது.

எனினும் தொடர்ந்து இணைந்த பிரசன்ன ஜெயவர்த்தனா-வாஸ் ஜோடி ஓட்டங்களை எடுத்தது.

இதில் பிரசன்ன ஜெயவர்த்தனா 18 ஓட்டங்களுடன் டினேஷ் கனேரியாவின் பந்துவீச்சில் நேரடியாக போல்ட் செய்யப்பட்டு ஆட்டமிழக்க இலங்கை அணி முதலாவது இன்னிங்ஸில் 7 விக்கெட்டுக் களையிழந்து 644 ஓட்டங்களை எடுத்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது. இதில் சமிந்தவாஸ் ஆட்டமிழக் காமல் 12 ஓட்டங்களை எடுத்தார்.

பந்துவீச்சில் டினேஷ் கனேரியா 3 விக்கெட்டுக்களையும் சொகைப் மலிக் 2 விக்கெட்டுக்களையும் உமர் குல், யசீர், அரபாத் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணிநேற்றைய இரண்டாம்நாள் ஆட்டநேர முடிபில் ஒரு விக்கெட்டையிழந்து 44 ஓட்டங் களை எடுத்திருந்தது. இதில் சல்மான் பட் 23 ஓட்டங் களுடன் முரளிதரனின் பந்துவீச்சில் விக்கெட் காப்பாளர் பிரசன்ன ஜெயவர்த்தனாவிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.



களத்தில் மன்சூர் 18 ஓட்டங்களுடனும் அணித்தலைவர் யூனிஸ் கான் ஓட்டமெதனையும் ஆரம்பிக் காமலும் ஆட்டமிழக்காமலிருந்தனர். மூன்றாம் நாள் ஆட்டம் இன்றாகும்.

## மஹேல சாதனை

கராச்சியில் நடைபெற்று வரும் டெஸ்ட் போட்டியில் முதலாவது இன்னிங்ஸில் 240 ஓட்டங்களை குவித்த அணித்தலைவர் மஹேல ஜெயவர்த்தனா பல சாதனைகளைப் பதிவு செய்துள்ளார்.

மஹேல ஜெயவர்த்தனா டெஸ்டில் தனது 25ஆவது சதத்தை பூர்த்தி செய்து இலங்கை வீரர் ஒருவர் டெஸ்ட் அரங்கில் அடித்த அதிக சதங்கள் என்ற சாதனையை பதிவு செய்தார்.

அத்துடன் தனது 101ஆவது டெஸ்ட் போட்டியில் விளையாடிய மஹேல ஜெயவர்த்தனா 8 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்து முதலாவது இலங்கை வீரர் என்ற சாதனையும் பதிவு செய்தார். அத்துடன் டெஸ்ட் அந்தஸ்து பெற்ற அணிகள் அனைத்துக்கும் எதிராக சதம் பெற்ற உலகின் 8 ஆவது வீரர் என்ற பெருமையை மஹேல ஜெயவர்த்தனா பெற்றார்.

டெஸ்ட் அரங்கில் தனது 5 ஆவது இரட்டைச்சதத்தை பூர்த்தி செய்த மஹேல ஜெயவர்த்தனா வெளிநாடு ஒன்றில் பெற்ற முதலாவது இரட்டை சதம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

## கிளார்க் திருமணம் எப்போது?



(மெல்போர்ன்)

தொடர்ந்து கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்க இருப்பதால் அவுஸ்திரேலிய வீரர் கிளார்க்கின் திருமணம் தள்ளிப்போகிறது.

அவுஸ்திரேலிய துணைத்தலைவர் மைக்கெல் கிளார்க். இவரது காதலி லாரா பிங்கிள். இருவருக்கும் திருமணம் நடக்கப் போவதாக செய்திகள் வெளியாகின.

கடைசியாக கடந்த 2008ஆம் ஆண்டு அக்டோபர் 3ஆம் திகதி திருமணம் நடக்கப் போவதாக கூறப்பட்டது. கிரிக்கெட் தொடர்களால் அப்போது திருமணம் நடக்கவில்லை.

இது குறித்து திருமண முகவர் கூறுகையில்;

இந்த ஆண்டும் கிளார்க் தொடர்ந்து கிரிக்கெட் விளையாட வேண்டியுள்ளது.

அதனால் திருமணத்திற்கு இம்முறையும் நேரம் கிடைக்காது என்றார்.

இதற்கிடையே தொடர்ந்த கிரிக்கெட் அட்டவணைக்கு இடையில் இந்த ஆண்டு மே 12 முதல் 23 வரையான 10 நாட்கள் ஓய்வாக இருப்பதாகவும் அந் நேரத்தில் கிளார்க் திருமணம் நடக்கலாம் என தெரிகிறது.

## சுழல் நாயகன் முரளியின் சாதனைப் பயணம்... 16





இரண்டாவது டெஸ்டில் வெற்றி பெற்று தென்னாபிரிக்கா அணி தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்த நிலையில் தீர்க்கமான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் 1993ஆம் ஆண்டு செப்டம்பர் 14-19 ஆம் திகதிவரை கொழும்பு பி.சரவணமுத்து விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 316 ஓட்டங்களை எடுத்தது.

இதில் முரளிதரன் 35.1 ஓவர்கள் பந்துவீசி 8 ஓட்ட மற்ற ஓவர்கள் உட்பட 64 ஓட்டங்களை வழங்கி ஜொண்டி ரோட்ஸ் (7) மக்மிலன் (2) ரிட்சட்ஸன் மற்றும் ஸ்சுல்ற்ஸ் (0) ஆகியோரை ஆட்டமிழப்புச் செய்து 4 விக்கெட்டுக் களை வீழ்த்தினார்.

தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 296 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

இதனால் 11 ஆவது வீரரான முரளிதரன் துடுப்பெடுத்தாடும் வாய்ப்பை இழந்தார். இதன் மூலம் முதலாவது இன்னிங்ஸில் 20 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலையில் இருந்த தென்னாபிரிக்க அணி 2 ஆவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி 4ஆம் நாள் ஆட்ட முடிவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 159 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந்நிலையில் 5 ஆவது இறுதி நாள் ஆட்டம் மழை காரணமாக கைவிடப்பட போட்டி வெற்றிதோல்வி யின்றி முடிபடைந்தது. இதில் முரளிதரன் 15 ஓவர்கள் பந்துவீசி 3 ஓட்ட மற்ற ஓவர்கள் உட்பட 39 ஓட்டங்கள் கொடுத்து ஜொண்டி றோட்ஸ (19) ஆட்டமிழப்புச்செய்து ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.

**பாலா**

3ஆவது போட்டி வெற்றி தோல்வியின்றி முடிபடைய டெஸ்ட் தொடரில் தென்னாபிரிக்க அணி 1:0என்ற கணக்கில் கைப்பற்றியது. இப்போட்டியில் முரளிதரன் இரு இன்னிங்ஸிலுமாக 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

### முரளியின் முதலாவது வெளிநாட்டுப் பயணம்

இலங்கை அணியில் இணைத்துக்கொள்ளப்பட்ட பின் உள்ளூரில் 9 டெஸ்ட், 4 ஒரு நாள் போட்டிகளிலும் விளையாடிய முரளிதரன் முதல்முறையாக இலங்கை அணியின் வெளிநாட்டு சுற்றுப்பயணத்திற்கான அணியில் சேர்த்துக்கொள்ளப்பட்டார்.

பாகிஸ்தான், இலங்கை மற்றும் மேற்கிந்திய தீவுகள் ஆகிய அணிகள் மோதிய சார்ஜா முக்கோண ஒருநாள் போட்டித் தொடர் 1993ஆம் ஆண்டு ஒக்டோபர்-நவம்பர் மாதங்களில் சார்ஜாவில் நடைபெற்றது. (பயணிக்கும்)

## இருபது-20 போட்டிகளுக்கான நியூசிலாந்து அணி அறிவிப்பு

(கிறிஸ்ட்சேர்ச)

தோனி தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி 47 நாட்கள் சுற்றுப்பயணமாக நியூசிலாந்து சென்றுள்ளது. இரு அணிகளுக்குமிடையே இரண்டு இருபது-20 போட்டி, ஐந்து ஒருநாள் மற்றும் மூன்று டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடர் நடைபெறுகிறது.

முதல் இருபது-20 போட்டி கிறிஸ்ட்சேர்ச்சில் நாளை மறுதின மும், இரண்டாவது இருபது -20 போட்டி வெலிங்டனில் 27 ஆம் திகதியும் நடக்கிறது.


இந்த இரண்டு இருபது -20 போட்டிக்கான நியூசிலாந்து அணியை, அந்த நாட்டுக் கிரிக்கெட் சபை நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

காயம் காரணமாக அணியில் இடம்பெறாமல் இருந்து வந்த ஜேக்கப் ஓரம், ஜெசிரைடர் ஆகியோர் மீள அணிக்குத் திரும்பியிருக்கிறார் கள்.


வேகப்பந்துவீச்சாளர் தோம்சன் அணியில் இடம்பெற்றிருக்கிறார். இருபது-20 போட்டிக்கான நியூசிலாந்து அணி வருமாறு;

விக்டோரி (அணித்தலைவர்), நீல்புரூம், இயன் புட்லர், கிராண்ட் எலியோட், மார்டின் குப்தில், பிரண்டன், மக்கலம், நதன்மக்கலம், ஓபிறின், ஜேக்கப் ஓரம், ஜெசிரைடர், டிம் சௌத்தி, ரோஸ் ரெய்லர், தோம்சன். (5)

## இது துடுப்பு



*பாகிஸ்தான் அணிக்கு எதிராக நேற்று முன்தினம் சதம் அடித்த மகிழ்ச்சியில் இலங்கை அணி வீரர் திலான் சமரவீர.*



நாட்டில் அமைதிவேண்டி இந்து அமைப்புக்கள் ஒன்றிணைந்து நல்லை ஆதீனத்தில் நேற்று பிரார்த்தனையில் ஈடுபட்டன. காலை 9 மணிமுதல் 11 மணிவரை நடைபெற்ற பிரார்த்தனை நிகழ்வில் வேத பாராயணம், தேவாரம், பண்ணிசை, கூட்டுப் பஜனை என்பன இடம்பெற்றன. இப்பிரார்த்தனை நிகழ்வில் இந்து குருமார்கள், ஆதீனக் குரு முதல்வர் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# விடுதலைப் புலிகளின் இலக்கு ஜனாதிபதி மாளிகையா?

## 'லக்பிம' செய்தி வெளியீடு

(கொழும்பு)

தலைநகர் கொழும்பில் கடந்த வெள்ளிக்கிழமை விடுதலைப் புலிகள் நடத்திய வான்தாக்குதலின் போது அவர்களின் இலக்குகளில் ஒன்று ஜனாதிபதியின் இல்லமாக இருந்திருக்கக் கூடும் என 'லக்பிம' வார ஏடு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

புலிகளின் தாக்குதலுக்கு இலக்கான உள்நாட்டு வரித் திணைக்களத்திற்கு எதிராக விமானப் படை தலைமையகம் இருந்ததனால் அதுவே புலிகளின் இலக்காகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் கொழும்பு நகரத்திற்குள் ஊடுருவிய விமானங்கள் பல தடவைகள் தமது இலக்குகளை தேடி வட்டமிட்டுள்ளன. உள்நாட்டு வரித் திணைக்களத்திற்கு அண்மையில் இராணுவத் தலைமையகமும், ஜனாதிபதியின் இல்லமும் உள்ளன.

எனினும் புலிகள் விமானம் தனது இலக்கினை தாக்குவதற்கு முன்னர் தாக்குதலில் சிக்கியதனால் உள்நாட்டு வரி திணைக்களத்தின் மீது மோதி வெடித்துள்ளது.

எனவே, புலிகளின் இலக்கு ஜனாதிபதியின் இல்லமாக இருக்கலாம் என தெரிவிக்கப் படுகின்றது. உள்நாட்டு வரித்திணைக்களத்தின் மூன்றாவது மாடிக்கும் 12ஆவது மாடிக்கும் இடை யில் புலிகளின் விமானம் மோதி வெடித்துள்ளது.

திணைக்களத்திற்கு பாரிய சேதம் ஏற்பட்டுள்ளது. எனினும்,அது தொடர்பான மதிப்பீடுகள் தற்போதுவரை மேற்கொள்ளப்படவில்லை என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## இந்தியாவிலிருந்து...

தாங்கள் அறிந்திருப்பீர்கள்.குத்துமதிப்பான கணக்குப்படி ஜனவரி 15 ஆம் திகதியிலிருந்து தற்போது வரை 35 ஆயிரம் மக்கள் போர் பகுதியிலிருந்து வெளியேறி இந்த முகாம்களில் தங்கியுள்ளனர்.

இதில் 10 ஆயிரம் மக்கள் இரு தரப்பிற்கும் இடையே நடந்த சண்டையில் சிக்கி காயமடைந்திருப்பதும் மற்றவர்கள் பல்வேறு நோய்களால் அவதிப்படுவதும் மிகவும் வேதனையாகவும் இதயத்தை வருத்துவதாகவும் உள்ளது.

இவர்களுக்கு மருத்துவ உதவி செய்ய மிகப் பெரிய அளவில் உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் உபகரணங்கள் தேவைப்படுகின்றன.அப்பாவி தமிழர்கள் படும் சிரமம் குறித்து சர்வதேச அமைப்புக்கள் கவலை தெரிவித்துள்ளன.

மேலும் இன்னும் போர்ப் பகுதியில் ஒரு லட்சம் மக்கள் இருப்பதால் இன்னும் அதிகளவில் காயமடைந்த மற்றும் நோய்வாய்ப்பட்ட மக்கள் வெளியேறி வர வாய்ப்புள்ளது. நிலைமை மிகவும் விபரீதமாகி வருவதால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வு அழிக்கக்கூடிய அமைப்புக்கள் உடனே தலையிட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

எனவே மனிதாபிமான அடிப்படையில் மருத்துவ உதவிகளை இலங்கைக்கு உடனே அனுப்ப மத்திய அரசு ஏற்பாடு செய்வதே சரியானது.மத்திய அரசின் இந்த முயற்சிக்கு உதவியாக அனுபவமிகுந்த டாக்டர்கள் மருத்துவ உதவியாளர்களை அனுப்ப தமிழக அரசு தயாராக உள்ளது.

மருத்துவ முகாம்கள் அமைக்கத் தேவையான கருவிகளையும் அனுப்ப தமிழக அரசும் விரும்புகிறது.எனவே தங்கள் இவ் விஷயத்தில் உடனே தலையிட்டு இதற்கான வழிமுறைகளை இலங்கை அரசுடன் வகுத்து, மருத்துவப் பொருட்கள் மற்றும் கருவிகளை மருந்துகளுடன் விரைவாக அனுப்ப உடனே ஏற்பாடுகளை செய்தால் மிகவும் நன்றியுடையவனாக இருப்பேன். இவ்வாறு கருணாநிதி தெரிவித்துள்ளார்.

இந்தக் கடிதத்தின் பிரதிகளை காங்கிரஸ் தலைவர் சோனியாவுக்கும், மத்திய வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜிக்கும் அனுப்பியுள்ளார். (ச-5)

## எறிகணைகள் வீழ்ந்து...

(வயது 49), அ.சுகந்தினி (வயது 29), அ.தனுசன் (வயது 4), அ.கமலா (வயது 25), மு.திருஞானசம்பந்தன் (வயது 47), த.சர்வகலாஜினி (வயது 11), வேல்பாதம் (வயது 55), கி.செல்லத்துரை (வயது 55), சு.ஆறுமுகம் (வயது 67),

ம.மணிமாறன் (வயது 28), த.இராஜ்குமார் (வயது 26), க.மனோகரன் (வயது 35), க.நந்தகுமார் (வயது 58), கோ.சிலுவைராசா (வயது 28), மு.இராசேந்திரம் (வயது 42), ஜெ.உசா (வயது 18),ஜெ.ஜெனிதன் (வயது 25),அ.முனியாண்டி (வயது 40), சி.தர்மேந்திரன் (வயது 28), செ.தினேஸ்குமார் (வயது18),

ம.ரூபினி (வயது 17), ப.சரஸ்வதி (வயது 26), ஆ.சுகந்தினி (வயது 29), ஐ.இராசேந்திரம் (வயது 49), லோகாம்பிகை (வயது 33), த.தர்சிகா (வயது 21),து.குலசிங்கம் (வயது 63),எஸ்.சிலுவைராசா (வயது 28),க.சிவசத்தியகுமார் (வயது 26), ம.கருணாணந்தி (வயது 60), க.மேரி (வயது 22),

செ.சத்தியமூர்த்தி (வயது 50),க.பகீதரன் (வயது 18), தே.கேதீஸ்வரன் (வயது 13), சு.இராணி (வயது 42), கே.மேரிலூர்த்தி (வயது 64),அ.சந்திரகலா (வயது 16),மே.மணிமாலா (வயது 43),ம.பரஞ்சோதி (வயது 48), க.சரஸ்வதி (வயது 42), தே.தவீதராசா (வயது 34), கா.பரமசிவமூர்த்தி (வயது 55),

நா.சசிக்குமார் (வயது 15), நா.ஜெனிராஜ் (வயது 22), சி.நல்லையா (வயது 52), பா.லோகன்(வயது 30), செ.கனகாம்பிகை (வயது 50), சு.குவேந்திரவதனி (வயது 35), பெ.கதிர்வேலு (வயது 72), செ.சரோஜா (வயது 35), அ.பிரியங்கா (வயது 17) ஆகியோர் படுகாயமடைந்துள்ளனர். (ச-5)

## ஐ.நா.-செஞ்சிலுவைச்...

பாதுகாப்பு என்ற செயலில் தமிழ் மக்கள் சரித்திர ரீதியாக வாழ்ந்துவந்த கிராமங்களில் இருந்து அவர்களை அப்புறப்படுத்தி மக்களை வேறு இடத்தில் வாழவைக்கும் அரசாங்கத்தினது நோக்கத்தினை நாங்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது.

மக்கள் மத்தியில் இருக்கின்ற சந்தேகமே அவர்கள் வெளிவருவதில் இருக்கின்ற முக்கியமான தடையாக உள்ளது. தாங்கள் வெளியேறி வேறு இடங்களுக்குச் சென்றால் அரசாங்கம் திரும்பி சொந்தக் கிராமங்களுக்குச் சென்று குடியமர்வதற்கு இடமளிக்காது அதற்கு வழிசெய்யாது என்ற பயம் மக்கள் மத்தியில் இருக்கிறது.

இதனால் இந்தியா, நிச்சயமாக இந்த மக்களை முழுமையாக அவர்களுடைய வதிவிடங்களில், கிராமங்களில் மீளக் குடியேற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் இரா.சம்பந்தன் தெரிவித்தார். (ச-3)

## வன்னி மக்களை வெளியேற்ற...

அமெரிக்காவின் ஆசியப் பிராந்திய கட்டளைத் தலைமையகமான ஹவாயிலிருந்து அமெரிக்க இராணுவ உயர்மட்டக்குழுவொன்று இலங்கை வந்திருப்பதாகவும், வன்னி மக்களை வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகள் குறித்து இவர்கள் ஆராய்ந்து வருவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமெரிக்க விமானப் படை மற்றும் கடற்படையினர் உட்பட வன்னி மக்களை வெளியேற்றுவதற்கு அமெரிக்க இராணுவ உதவிகள் வழங்கப்படவிருப்பதாக கொழும்பு ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

வன்னியிலுள்ள மக்களை கடல்மார்க்கமாக வெளியேற்றுவதே இந்த நடவடிக்கையின் நோக்கமென அந்த ஊடகம் குறிப்பிட்டுள்ளது.

அமெரிக்கா தலைமையிலான கூட்டு மனிதநேயப் படையணி மக்களை வெளியேற்றவிருப்பதாக வெளிவிவகார அமைச்சர் றோகித போகொல்லாகமவும் அந்த ஊடகத்துக்கு உறுதிப்படுத்தியுள்ளார்.

எனினும் எப்பொழுது இந்த மனித நேய நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்பது பற்றி தனக்குத் தெரியாது என அவர் கூறியுள்ளார்.

இந்த நடவடிக்கையில் இணைத்தலைமை நாடுகளைத் தனிப்பட்ட ரீதியில் இணைத்துக் கொள்வதற்கு அரசாங்கம் பேச்சுக்களை நடத்தி வருவதாகவும்,மக்களை வெளியேற்றுவதற்கு ஏனைய நட்பு நாடுகளுடன் கலந்துரையாடல்களை நடத்தி வருவதாகவும் போகொல்லாகம அந்த ஊடகத்திடம் தெரிவித்தார்.

எனினும் இந்த நடவடிக்கைகள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் நடவடிக்கைகளை பாதிக்காத வகையில் அவர்களின் கொழியுடன் முன்னெடுக்கப்படுமென அந்த ஊடகத்தின் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வன்னியிலுள்ள மக்களை வெளியேற்றுவதற்கான உதவிகளை வழங்கத் தயார் என இந்திய வெளிவிவகார அமைச்சரும் பிரதமர் பதவியை தற்காலிகமாக வகித்து வருபவருமான பிரணாப் முகர்ஜி சில தினங்களுக்கு முன்னர் இந்திய நாடாளுமன்றத்தில் கூறியிருந்தார்.

இதனை இலங்கை அரசாங்கமும் ஏற்றுக் கொண்டிருந்தது.

வெளிநாடுகளின் மனித நேய நடவடிக்கைகளை இலங்கை ஏற்றுக் கொண்டிருந்த போதும் எப்பொழுது மக்களை வெளியேற்றும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என்பது தெளிவாகத் தெரியவரவில்லை என அந்த ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது. (ச-5)

## புதுக்குடி...

படையினரால் கைப்பற்றப்பட்டுள்ள விசுவமடு, அக்கராயன்குளம், முறிகண்டி, கொக்காவில், வன்னிவிளாங்குளம் போன்ற பகுதிகளிலும் இராணுவத்தினர் மேற்கொண்டுள்ள தேடுதல் நடவடிக்கையில் பல்வேறு ஆயுதத் தளபாடங்களும் வெடிபொருட்களும் கைப்பற்றப்பட்டிருப்பதாக இராணுவத் தலைமையகம் தெரிவித்திருக்கின்றது.

இதற்கிடையில் யாழ் குடாநாட்டின் கிழக்கு கரையோரப் பகுதியாகிய வெற்றிலைக்கேணிப்பிரதேசத்திற்கும் தாளையடிப்பகுதிக்கும் விடுதலைப் புலிகளின் பிரதேசத்தில் இருந்த 23 சிவிலியன்கள் படகுகள் மூலம் தப்பி வந்துள்ளதாகவும் இவர்கள் கடற்படையினரால் யாழ்ப்பாணத்தில் உள்ள சிவில் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் இராணுவத் தலைமையகம் கூறியிருக்கிறது. (ச-5)

## அம்பாறையில் துப்பாக்கிச் சூடு...

காயமடைந்தும் உள்ளதாகக் கூறுகிறது.

இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களில் சிவில் பாதுகாப்பு படையைச் சேர்ந்த மூவரும் அடங்குவதாக அந்தப் படைக்குப் பொறுப்பான பணிப்பாளர் நாயகம் ரியல்அட்மிரல் சரத் வீரசேகர கூறியிருக்கிறார்.

அந்தப் பகுதியில் பொலிஸ் விசேட அதிரடிப் படை மற்றும் சிவில் பாதுகாப்புப் படையினர் இணைந்து கூட்டாக தேடுதல் நடவடிக்கையொன்றை ஆரம்பித்துள்ளதாக பாதுகாப்புத் தரப்புத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

தப்பி வந்த கிராமவாசிகளின் தகவல்களின்படி பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளை அங்கு வந்த ஆயுதம் தரித்த நபர்கள் குடிசைகளுக்கு தீ வைத்து பின்னர் துப்பாக்கிப் பிரயோகமும் செய்ததாக அறிய வருகிறது.

சம்பவத்தையடுத்து கிராம வாசிகள் இடம் பெயர்ந்து அங்குள்ள பாடசாலைக் கட்டடமொன்றில் தற்காலிகமாக தங்கியிருக்கின்றனர். இதேவேளை இந்தத் தாக்குதலுக்கும் தங்களுக்கும் எவ்வித தொடர்புகளும் இல்லை என விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளதாக இணையத்தளமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (ச-3,5)

## ஐ.நா. பாதுகாப்புச் சபை...

சபையின் மனிதநேய விவகாரங்களின் தலைவர் சேர்.ஜோன் ஹோம்ஸ் இலங்கைக்கான விஜயத்தை முடித்துக்கொண்டு திரும்பிய பின்னரே பிரித் தானியா இவ்வாறு கூறியுள்ளது.

எனினும், சேர் ஜோன் இலங்கை விஜயத்தை முடித்துக் கொண்டு வந்தவுடன் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் விளக்கமளிப்பது சாத்தியப்படாது என ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பான் கீ மூனின் பேச்சாளர் மிஷேல் மொன்டாஸ் தெரிவித்தார்.

ஜோன் ஹோம்ஸ் கொலம்பியாவுக்குச் செல்லவிருப்பதாக அவர் கூறியுள்ளார். கடந்த சில வாரத்துக்கு முன்னர் இலங்கைப் பிரச்சினை தொடர்பில் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபையில் விளக்கமளிக்கும் பிரேரணையொன்றை மெக்சிக்கோ முன்வைத்தது.

இதற்கு பிரித்தானியாவும் ரஷ்யாவும் எதிர்ப்புத் தெரிவித்தன.

இதன் பின்னர் இலங்கை விடயம் தொடர்பாக ஆராய்வதற்கு பிரித்தானியப் பிரதமர் கோர்டன் பிறவுண், விசேட பிரதிநிதியொருவரை நியமித்தார். எனினும் இந்த நியமனத்தை இலங்கை அரசாங்கம் நிராகரித்துவிட்டது.

இந்த நிலையில் இலங்கை தொடர்பாக ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் விளக்கமளிக்கப்படவேண்டுமெனப் பிரித்தானியா தற்பொழுது கோரியுள்ளது. (ச-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.02.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.